# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

28—11—71

★

உள்ளே......

பிரச்னைகள் தீரவேண்டும்! (தலையங்கம்)

நேக்கு ஒண்ணும் புரியலே! (சிறுகதை)

ஏழையின் மத்தியிலே இறைவனைக் காண்கிறோம்! (கட்டுரை)

கத்தியை எடுத்தவன்! (சிறப்புக் கட்டுரை)

சோழமாதேவி (தொடர்கதை)

விலை 25 காசு



உலகப் பரிசுபெற்ற இந்திய வேளாண்மை ஆராய்ச்சிநிலைய இயக்கு டாக்டர் எம். எஸ். சாமிநாதனுக்கு அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் கேடயம் பரிசளிக்கிறார்.



# நேக்கு ஒண்ணும் புரியலே!

— சந்திரமூலரசன் —

'ஆன்பே சிவம்' என்றும் 'ஆண்டவன் தொண்டே இன்பம்' என்றும் ஐம்புலன்களை அடக்கி வாழ்பவர்களே பக்தன் என்று இந்த நாடு இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறது. புராணங்களும், இதிகாசங்களும், சாத்திர வரிசைகளும் காட்டும் கதைகளும், விளக்கங்களும் 'மதம் மக்களுக்கு அபின்' என்னும் உண்மையைக் காட்டுவதாக இருந்தாலும், தேவார திருவாசகங்கள் போன்ற தமிழ் நூல்கள் தெளிவாக்கும் கருத்துக்களைக் கேட்கும்போது, 'மதம் நல்ல அடிப்படையைக் கொண்டு உருவானதுதான்; வயிற்றுப் பிழைப்பிற்காக வந்தேறிகளின் வரவால்தான் அந்த அடிப்படை ஆட்டங் கண்டது' என்றுவது சில நல்லவர்கள் நம்பிவந்தார்கள். ஆனால், தேவாலயப் பாதுகாப்பு தியாகபூமி மலரைப் பார்த்தபோதுதான் அந்த நல்லவர்களை 'அடடா தவறு செய்துவிட்டோமே' என்று தவிக்கும் நிலை ஏற்பட்டது.

மதம் என்பது 'அபின்' மட்டுமல்ல அது ஓர் அழிவுப் படை; கொலை வெறிக் கூடாரம் என்பதற்குத் தியாக பூமியில் சில தீரர்கள் தீட்டியுள்ள எழுத்துக்களில் இருந்து தெரிகிறது. 'மாவட்டங்கள்தோறும் நாள் குறித்துப் போராட்டம் நடைபெறும்' என்னும் தேவாலயப் பாதுகாப்புத் தீரர்களின் அறிவிப்புப் பின்னணியோடு, மலரில் வந்துள்ள கட்டுரைகளைக் காணும்போது போராட்டம் என்பது 'கோட்சே நெறியில்' செல்வதுதான் என்னும் அவர்களின் நோக்கம் தெளிவாகிறது.

காவியும், கமண்டலமும் கத்தியோடு கொண்ட உறவுகளைப் பற்றி வரலாறுகள் நமக்குக் கதை கதையாகச் சொன்னாலும், இந்த வெள்ளை வேட்டிகளும், விமானப் பயணங்களும், வீரத்தை விளையாட்டாக நினைப்பதை மட்டும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை, வேதாந்த வித்தகர்கள் 'வேலெடுப்போம்; கூர் வாளெடுப்போம்' என்று மிரட்டுவதும், கொலை வெறிக் கோலாட்டம் போடுவதும் வேடிக்கையாக இருக்கலாம்; ஆனால் சட்டத்தின்முன் இவர்கள் நிறுத்தப்பட வேண்டியவர்களே என்பதை மட்டும் கோடிட்டுக் காட்டியே தீரவேண்டும்.

ஆண்டவனிடத்தில் கோரிக்கை வைத்தே பழக்கப்பட்டவர்கள், இன்று அரசிடம் சில கோரிக்கைகளை வைக்க விரும்புகின்றனர். கொலைகாரனும், கொள்ளைக்காரனும் கோரிக்கை வைத்திட உரிமை படைத்தவர்கள் என்னும்போது, இவர்கள் கோரிக்கை வைப்பதைக் குற்றமெனச் சொல்லவில்லை. 1—12—71-ல் உண்ணுவிரதப் போராட்டமாம்; காந்தியாரிடம் மன்னிப்பை வேண்டிச் சொல்லுகிறேன், இவர்கள் விரதமிருக்கட்டும்! மாவட்டங்கள்தோறும் பாதுகாப்பு மாநாடாம்; போடட்டும்; ஒன்றுகக் கூடட்டும். ஆனால், 'குத்துவோம், வெட்டுவோம்; குடலைச் சரிப்போம்' என்று குத்து வெட்டுக் குப்பனைப் போலவும், பிளேடு பக்கிரியைப் போலவும், குதிப்பதை மட்டும் வேண்டாம் என்றுதான் வேண்டிக் கொள்ளுகிறோம்;

'கம்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலாக' என்று சமர்ப்பன

## சிறுகதை!

ஆசிரியர் கூறுகிறார். இதன் விளக்கமென்ன? தங்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாத அரசும், அமைச்சர்களும் கம்சனைப்போன்றவர்கள்; அந்தக் கம்சனை நெடுமாலாக நின்று கொன்று தீர்ப்போம் என்றுதானே பொருள்! தியாக பூமியார் இன்னும் புராண காலத்தில்தான் வாழ்கிறாரா? நாத்திகர்கள் என்றும், பகுத்தறிவாளர்கள் என்றும், தி. மு. கழகத்தினர் என்றும், பெரியார் சீடர்கள் என்றும் அங்கிங்கெனாதபடி எங்கும் திட்டித் தீர்க்கும் தியாகப் பிழம்புகளே! நீங்களெலாம் நெடுமாலாக மாறி, நீங்கள் பகையாகக் கருதுபவர்களைக் கம்சர்களாக மாற்றப் போவதாக மிரட்டுவது, 'கொலை — செய்வோம்; கொன்றொழிப்போம்' என்றுதானே கொள்ளவேண்டும்!! அதற்குத் தயாராகுங்கள் என்று பக்தர்களுக்கு 'ரகசியச் செய்தி'யனுப்புகிறீர்கள் என்றுதானே முடிவெடுக்க வேண்டும்!! மற்ற மதத்தவர்களிடம் இவர்கள் போகும்போது வாலை இரண்டு கால்களுக்கு இடையில் வைத்துக் கொண்டுதான் போகின்றார்கள்" என்று பண்பு ரசம் — சொட்டச் சொட்ட எழுதியுள்ள பக்த சிரோன்மணி ரங்கசாமித் தேவரை நினைத்துக்கொண்ட ஒரு அநாமதேயப் பேர்வழி — ஆலய விடுதலைப் போராட்டம் ஏன்? என்று கேள்வியைத் தலைப்பாக்கி விடையும் கண்டுள்ளார். பெயரைக்கூட வெளியிட விரும்பாத அந்தக் கட்டுரையை எழுதிய வீராதி வீரர், தங்களின் போராட்டத் திட்டமே கொலை செய்வதுதான் என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவாகக் கூறியுள்ளார். பெயரைக் குறிப்பிடாததாலேயே அவரைப் பேடி என்று அழைக்கலாமா என்று நினைத்தாலும், அருமையான உவமைகளால் தங்களின் உள்ளத்தைத் திறந்து காட்டியத் திறமைக்காகவாவது தீரர் திலகம் என்று பட்டம் கொடுப்பது தவறாகாது. ஆணா, பெண்ணா என்றுகூட அறிந்து கொள்ள முடியாத அந்த 'அலி' யார் [மன்னிக்கவும்; அர்த்தநாரீஸ்வரர்] அப்படி என்னதான் வெடி குண்டைத் தூக்கிப் போட்டுவிட்டார் என்று துடிக்கவேண்டும்.

'உம்'முன்னு இருந்தவங்க 'திடீர்'னு கட்டி அணைச்சிகிட்டாங்க. நேக்கு ஒண்ணுமே புரி

(4-ஆம் பக்கம் பார்க்க)




# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13  ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 28—11—71 | இதழ் 20


# பிரச்னைகள் தீரவேண்டும்!

சிம்சன் குரூப் கம்பெனிகளும்கூட இப்போது சிம்சன் நிறுவன ஊழியர்களுக்கு ஆதரவு காட்டும் வகையில் வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கி விட்டார்கள் என்ற செய்தி நாட்டின் அமைதியில் நாட்டம் கொண்டுள்ள எவருக்கும் கவலையை விளை விக்காமல் இருக்காது.

இந்தக் கிழமை திங்களன்று, குரூப் நிறுவன மான "மெயில்" அலுவலகம்கூட வேலை நிறுத்தம் செய்துவிட்டதாகவும், ஆனல் இந்தத் தகராறுகளின் உற்பத்திக் கூடத் தலைவர்கள், 'மெயில் நிறுவனத் துக்கு மட்டும் விலக்களித்து விட்டு, மற்றைய அனைத்து தொழிற்கூடங்களும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண் டிருப்பதாகவும் செய்திகள் வந்ததனைத் தொடர்ந்து, புதிய, தலைப்பில் கண்ட செய்தியும் வந்திருக்கிறது.

சிம்சன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் தொடர்பான செய்திகளும், அது தொடர்பான விவரங்களும் பழைய செய்தியாகும்.

சென்ற கிழமைதான் இது தொடர்பாக, அனைத்துக் கட்சித் தொழிலாளர்கள் சார்பு என்ற பெயரில் சிலர், அமைச்சர் என். வி. என். அவர்களைச் சந்தித்து, விளக்கமாக உரையாடி, விவரங்களைத் தந்து, அதேபோல் பெற்றுக்கொண்டு, மறுநாள் முதல் எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பவேண்டும் என்ற அறிக்கையும் விட்டிருந் தார்கள்.

அறிக்கைதான் வந்ததே யொழிய, பிரச்னைத் தீர்ந்ததற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை. மாருக, வேலைநிறுத்தம் நாள் கணக்கில் போய்க் கொண்டிருப்பதுடன், நிறுவனங்களின் எண்ணிக் கையும் இப்போது மிகுந்துகொண்டிருக்கும் நிலை யைக் காணவேண்டியதாகி இருக்கிறது.

இவற்றிற்கெல்லாம் ஆணி வேர் என்று நாம் கருதுவது, சிம்சன் குரூப் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் இடத்தை, தி. மு. கழகம் பிடித்துக் கொண் டதைப் பொறுத்துக்கொள்ள முடியாத காழ்ப் புள்ளங்களது "கருமை மனம்"தான் என்று நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. தொடர்புடையவர் களுக்கும் இது புரிகிறது. ஆனல் தூர இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் பொதுமக்களுக்கு?

திராவிட முன்னேற்றக் கழகம், சந்தர்ப்பம் கிடைத்த பொழுதெல்லாம் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கையினை வலியுறுத்திக்கொண்டு வந்திருக்கிறது. இப்பொழுதும் அந்தக் கொள்கை யினை ஆதரிக்கவும் செய்கிறது.

ஆனல் கழகம் மட்டும் இக்கொள்கையினைப் பற்றி எவ்வளவு உரத்துக் குரல் கொடுத்தாலும் பயன் விளையாது; மற்ற எல்லா அரசியல் கட்சிகளும் கூட இக்கொள்கையினை ஏற்றுக்கொள்ள வேண்டும்; எல்லா கட்சித் தலைவர்களும், இதுபற்றிக் கலந்து பேசி, திட்டங்களை வகுத்துச் செயல்பட வேண்டும். இது நடக்குமா? நடக்கும் என்பதற்கான எந்த அறிகுறியும் காண முடியவில்லை.

இச்சூழ்நிலையில், ஆளும் பொறுப்பிலுள்ள ஒரு கட்சி, தொழிற்சங்கங்கள் மூலமும்கூட தொழிலாளர் களுக்கு நல்லவை செய்ய, பயன் கிடைக்க விரும்பு வதும், அதற்கான நடைமுறைகளில் ஈடுபடுவதும் குற்றமான செயலோ, பாவகரமான காரியமோ அல்ல!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டில், அது எந்த ஒன்றில் தன் பார்வையைத் திருப்புகிறதோ, அதிலே வெற்றி காண்பதும், அந்த வெற்றிக் கனியை மக்கள் அனைவருக்கும் பயன் கிடைக்கத்தக்க வகையில் மாற்றுவதும் என்பது கடந்தகால நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது.

இதைப்போலவேதான், அண்மைக் காலமாக தொழிற் சங்கங்களின் பக்கம் தன் கவனத்தைத் திரும்ப முயன்றபோது, வெற்றிகளின் வேகம் துரி மாகிக் கொண்டிருந்தது.

காரணம், இதுவரையில் தொழிற்சங்க அமைப்பு களில், அந்த அமைப்புத் தலைவர்கள் எந்த ஏகபோக ஆதிக்கத்தைக் கண்டித்து வந்தார்களோ, அதே ஆதிக்கம் உயர்ந்த அளவுக்கு இருந்து வந்ததும், அந்த ஆதிக்கச் சக்தியை ஏற்றுக்கொள்ள விரும்பாத இதயங்களின் எண்ணிக்கை மிகுந்துகொண்டே வந்த தும்தான் முக்கிய காரணமாக இருந்தது, கழக அமைப்புக்களின் வெற்றிக்கு.

ஒவ்வொரு நிறுவனங்களின் சங்க அமைப்பும் தங்களது கையை விட்டு நழுவிக்கொண்டே வரும் நிலைமையை பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், குடிக்கக் கிடைத்த கூழை கொள்ளை கொடுத்துவிட்டவனது நிலையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதென்பதை வாடிக்கையாகக் கொண்டு விட்டார்கள்.

அத்துடனில்லாது, தங்களது ஆதரவு தொழிலா ளர்களது துணையுடன் வேலைநிறுத்தத்தையும் ஊக்கப் படுத்தி, வேலை நிறுத்தத்துக்கான வழிமுறைகளைச் செய்து விடுகிருர்கள். இதன் காரணமாக பெரும் பான்மை தொழிலாளர்களும் பாதிக்கப்படும் வகை யில் நிலைமைகளையும் உற்பத்தி செய்து விட்டு விடுகிருர்கள்.

சிம்சன் நிறுவன வேலை நிறுத்தத்தின் இப்போ தைய நிலை, இந்த உண்மையைத்தான் படம் பிடித் துக் காட்டுகிறது. இருந்ததை இழந்த எரிச்சலில் எதை எதையோ எடுத்து மேலே போட்டுக்கொண்டு, தாங்களும் கெடுகிருர்கள். மற்றவர்களையும் கெடுக்கி ருர்கள்! பரவலாக இது தொழிலாளர் சமூகத்துக்கு மட்டுமல்ல, தொழில் சமூகத்துக்கே இது நல்ல அடையாளமாக இராது.

நாட்டின் பொதுச் சூழ்நிலை, எந்தக் காரணத் தாலும் வேலை நிறுத்தம், எந்தப் பகுதியிலும் நடை பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக் கிறது. இந்நிலையில் ஆதிக்கப் போட்டிக்காக ஒரு வேலை நிறுத்தம் என்றால், அதனைப் பொதுமக்கள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்; அனுதாபப் படவும் மாட்டார்கள்.

பேசித் தீர்க்கப்பட முடியாத பிரச்னைகள் இருக்க முடியாது—பிரச்னைகள் தீரவேண்டும் என்ற விருப்பம் இருந்தால்!

தொடர்புடையவர்களிடம் அப்படி இருப்பதா கத் தெரியவில்லையே!

ஜீ

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யலே. கொஞ்சநேரம் பாத்திண்டிருந்தேன். ஆனா, நேரம் போகப் போக, ஐயோ, நேக்கு வெட்கமாப் போயிடுத்து. ஆனாலும் இந்த அண்ணா, படு அண்ணாதான்னு நெனைச்சுண்டேன். நான் கண்ணெ இறுக்கி மூடிண்டாலும் அதே என் மனசுலே 'சினிமா'போல தோணிக்கிட்டே இருந்துது!

அன்னிக்கு ஆத்துலே நான் தனியா இருந்தப்போ, நெனைச்சிட்டிருந்தேன். திருப்பித் திருப்பி நெனைக்க நெனைக்க, நேக்கு உடம்பெல்லாம் கொதிக்கிற மாதிரி— ஏன்? நேக்கு ஒண்ணுமே புரியலே!

அப்போ, அப்போதான் மத்தியானம் தொவைச்சுபோட்ட துணி கொடியிலேயே கிடக்கிற ஞாபகம் வந்திச்சு! 'அய்யோ! மன்னி வந்தா வைவாளே! மழை வந்தா துணியெல்லாம் எடுத்து உள்ளே வைக்கச் சொன்னாளே'ன்னு நான் நெனைச்சுண்டு கொல்லைப்புறம் ஓடினேன். துணியெல்லாம் நல்லா நனைஞ்சிடுத்து. நனைஞ்ச துணிகளெ உள்ளே இருந்த கொடிலே போட்டப்பறம்தான், நான் உடுத்திட்டிருந்த துணி யெல்லாம் நனைஞ்சிருந்ததைப் பார்த்தேன்.

ஓ! என் மன்னி என் ஜாக்கெட்லே மாரோரம் தெச்சுக் கொடுத்த இடம் இத்துப் போயிருந்துச்சு. மார்கூட கொஞ்சம் வெளியே தெரிஞ்ச மாதிரி......... யாரோ கதவைத் தட்டறாளே! நான் ஓடினேன்—

நான் கதவைத்திறந்தேன். திறக்கறச்சே வெளியே ஒருஆண்பிள்ளை நின்னுண்டிருந்தான். திடீர்னு எனக்கு ஏதோ ஞாபகம் வந்திச்சு. ஆனா, நான் 'படார்'னு கதவைச் சாத்தித் தாள் போட்டிண்டிருக்கலாம். பாவி, திடீர்னு என் முந்தானையை இழுத்துகிட்டு உள்ளே ஓடினேன். என் உடம்பு ஏதோ குளிர் மாதிரி நடுங்கித்து. ஏன்? நேக்கே புரியல்லே. அப்புறம் மெல்ல திரும்பிப் பார்த்தேன்...... அவன் வெளியே போயிடறதுக்காகத் திரும்பினான். என்ன நெனைச்சானோ, விட்டுக்குள்ளே, என்னைப் பார்த்தான். அவன் பார்வையிலே......அய்யோ, நேக்கு ஏனோ குபீர்னுடுத்து. ஏன் அவன் மூஞ்சி இப்பிடி மாறிடுத்து? அப்புறம்... அப்புறம்......... அவன் படார்னு கதவைச் சாத்தறச்சே உயிர் 'பக்'குன்னுத்து. அவன் கண்கள்லே ஏன் அப்படி ஒரு தீ? என் தொண்டையெ ஏதோ அடைச்சிண்ட மாதிரி........நான் கத்தணும்னு நெனைச்சேன். ஆனா கத்த முடியல்லே......இதோ, என்னை நெருங்கிட்டான். அவன் என்னை என்ன செய்யப் போறான்? என் இதயத்தை யாரோ கையாலே பலவந்தமாப் பிடிச்சு, 'குடு,குடு'ன்னு பிடுங்கினாப்போல...இதோ நான் கத்தப்போறேன்...'அடேய், என்னடா செய்யறே?' ஆனா...எங்கோ இதோ மாதிரி ஒரு நாயின் சத்தம் என் காதிலே அரை குறையா விழுந்திண்டிருந்தது. நான் அவன் கைகள்லே மயங்கி, தேய்ஞ்சு, ஒட்டி......

“தூ”— நான் ஏனோ காறித் துப்பிண்டு ஜன்னலைப் படார்னு மூடிண்டு திரும்பறேன். “ஏண்டி, துப்பறே”ன்னு என் மன்னியின் குரல் நாராசமா என் காதிலே விழறது. “அங்கே, வெளியே, ரெண்டு நாய்க...” விஷயத்தை நான் சொல்றேன். “தூ”-ன்னு அவளும் காறித் துப்பிட்டு ஆக்ரோஷமா என்னைப் பார்த்து மொறைச்சிட்டுப் போறா. ஆனா ஒரு சந்தேகம் ... அது துப்பினது நாய்க்கா? இல்லே ... எனக்கா...? நேக்கு ஒண்ணும் புரியல்லே!

அப்புறம் அவன் எழுந்து என்னைப் பார்த்தான். நான் அரை மயக்கத்திலேன்னா இருந்தேன். அவன் மறுபடியும் ஒழுங்கா 'டிரஸ்' செய்திண்டான். நேக்கு ஒரே அழுகை வர்ர மாதிரி...நான் கீழே அலங்கோலமாக கிடந்தேன். அவன் இதோ போகப் போறான், ஏதோ சந்தைக்கு வந்து திரும்பினவன் மாதிரி. நான் நெனைச்சிப் பார்த்தேன். 'இவன்' வரத்துக்கு முன்னால் நான் எப்பிடி இருந்தேன்? இப்போ, ஏனோ என்னால் 'சட்'டுனு எழ முடியல்லே! என அழுகை பொத்திண்டு வந்தது.

கண்ணீர் மட்டும் கன்னத்திலே வழிந்தோடறது. நான் படுத்த படியே கீழே பார்க்கிறேன். என் ஜாக்கெட்லே கிழிஞ்சிருந்த பாகம் இப்போ ரொம்ப அதிகமாக கிழிஞ்சு......நான் முந்தானையெ எடுத்துப் போர்த்துக்கணும்னு நெனைக்கறேன். ஆனா—

இதோ, அவன் பொறப்பட்டுட்டான்! என்னைப் பார்க்கறான் அவன் பார்வையிலே பரிதாபமோ, வேறெ........? ஊகூம், நேக்கு ஒண்ணும் தெரியல்லே...'கோதா'விலே எதிரியை விழ்த்தின பயில்வான் மாதிரி ... இதோ, அவன் போறான். நான் 'நில்லுங்கோ'ன்னு சொல்லணும்னுநெனைச்சேன். ஆனா அவன் போயே போயிட்டான்.

எங்காவது கிணத்திலே விழுந்திடலாமான்னு நெனைக்கிறேன். ஆனா, நான் அப்பிடியே படுத்துக் கிடக்கிறேன்!—

திடீர்னு “என்ன கதவு தெறந்திருக்கு?”ங்கற என் அண்ணாவோட குரல் லேசாக கேட்கறது. ஓ! அவா ரெண்டு பேரும்... நான் சடார்னு எழுந்து பாத்ரூம் பக்கமாக ஓடறேன். அந்த மழை நேரத்திலும் பக்கெட் பச்சைத் தண்ணியை எடுத்து தலையிலே ஊத்திக்கிட்டேன்...!

“என்னா, இங்கே வந்து இந்த கோலத்தைப் பாருங்கோ. 'டிரஸ்' சோட தண்ணி ஊத்திண்டு இந்த ஜடம் நிக்கிறதை”—என் மன்னி இப்படிச் சொன்னதும் அண்ணா ஓடிவந்துபார்த்தான். “பைத்தியம், பைத்தியம்”ன்னு மன்னி சொன்னதும் அவனும் “ஓஹோ”ன்னு சிரிச்சான். ஆனா, தலையிலே வழியற தண்ணியோட என் கண்ணீரும் சேர்ந்து வழியறது நேக்குத்தானே தெரியும்?...

அன்னிக்கு ராத்திரி முழுக்க நான் தூங்கல்லே. அண்ணாவும் மன்னியும்கூட சரசம் புரிஞ்சிண்டு, முனகிட்டிருந்தா. ஏனோ நான் அதைப் பார்க்க விரும்பாதவ போல, கண்ணை இறுக மூடிண்டு “என்ன ஜென்மங்க”ன்னு மனசுக்குள்ளேயே வைதுண்டிருந்தேன். ஆனாலும், அன்னிக்கு சாயந்தரம் நடந்ததை நினைச்சாலும், அழுகை பொத்திண்டு வரது.

அடுத்த நாளும் நான் ஜடம் போல தான் வழக்கமாக நான் ஒக்கார்ர மூலேலே உட்கார்ந்திண்டிருந்தேன். சமயத்திலே மௌனமாய் கண்ணீர் விட்டுண்டுமிருந்தேன். 'ஏன் இந்த ஜடம் இப்படி அழறதுன்'னுகூட மன்னி கேட்கலே. அவ என்னைப் பார்க்கறப்ப எல்லாம் “பைத்தியம், பைத்தியம்”னு ஒரே வார்த்தையை உச்சரிச்சிண்டிருந்தா. ஆனா அது ஒண்ணும் என் மனசுக்கு அவ்வளவா படலே என் சிந்தனையெல்லாம் எங்கோ இருந்திச்சு. அன்னிக்கு மத்தியானம்கூட ஒண்ணும் சாப்

(15-ஆம் பக்கம் பார்க்க)




[33]

## நினைவாகிவிட்டதே - கனவு!

மகாகாமாவுக்கு அருகே அனுராதபுரம் பாதையில் உள்ள பயணிகள் விடுதியின் வாயிலில் நின்று, கண் பார்வை தெரியும் வரையில் விழிகளைப் பாய்ச்சிக் களைத்து, அலுத்துப் போய்விட்டான் வேட்டரையன். இரத்தினா இன்றைக்கு வருவதாகத்தானே ஓலை கிடைத்தது என்று எழுந்த சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள, கிடைத்த ஓலையை கையிலெடுத்துக்கொண்டு, விடுதியின் உள்ளே, விடுதி நிர்வாகியின் அறையில் எரிந்து கொண்டிருந்த இலுப் பெண்ணெய் விளக்கின் அருகே சென்று நின்று ஓலையைப் பிரித்துப் பார்த்தான். வாய் தானாக முணுமுணுத்தது, "இன்றைக்கு என்றுதானே எழுதி இருக்கிறார் தேவியார்!"

விடுதியின் நிர்வாகி ஒரு வயது கடந்த மூதாட்டி. அறுபது வயதுக்கும் அதிகமானவள். சிங்கள இனத்தைச் சார்ந்தவள். மறைந்த மன்னர் காகவன்தீசரின் தூரத்து உறவு என்று அந்த விடுதியில் வந்து தங்கி இருப்போரிடம் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் வழக்கம் ஒன்று அவளிடம் நீண்டகாலமாகவே இருந்தது. யாராவது, அரசகுடும்பத்தைச் சேர்ந்த நீ இங்கே வந்து ஏன் கஷ்டப்பட வேண்டும் என்று கேட்டால், "விகாரதேவியின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை — அதனால்தான்!" என்று சட்டென்று பதில் சொல்லிவிடுவாள்!

அந்த விடுதியின் நிருவாகப் பொறுப்புக்கு அவள் வந்தபோது, இளமை கொழிக்கும் எழில் பெண்ணாகத்தான் இருந்தாள். கணவனும் மனைவியுமாகத்தான் வந்தனர். இன்றைக்கு அவள் மட்டுமே எஞ்சி இருந்து, விடுதியைக் கவனித்துக்கொண்டிருக்கிறாள்.

வேட்டரையன், மகாகாமாவில் இருக்கிற நேரங்களில், பெரும்பாலும் அந்த விடுதியையே அவன் தனது தங்கும் விடுதியாக ஆக்கிக்கொண்டிருந்தான். அதனால் கிழவிக்கு அவனை நன்கு தெரியும், அவன் ஊர் சுற்றிப் பார்க்க வந்திருக்கும் ஒரு பயணி என்று! அந்த வகையில்தான் அந்த விடுதி முழுவதையும் தன்னுடையது போல ஆக்கிரமித்துக்கொண்டிருக்க வேட்டரையனால் முடிந்தது. அத்துடன் அவன் தாராளமாகக் கிழவிக்குக் கொடுக்கும் பணம் போல, வேறு எவரும் கொடுப்பதும் இல்லையே!

ஓலையைப் படித்துக்கொண்டிருந்த வேட்டரையனிடம் கிழவி "ஊருக்கு வரச்சொல்லி ஓலையா தம்பி" என்றாள். "ஆமாம் பாட்டி! புறப்படலாமா வேண்டாமா என்று யோசிக்கிறேன்! இந்த ஊர் எனக்கு ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது. ஏதாவது ஒரு வியாபாரத்தைக் தொடங்கிக்கொண்டு இங்கேயே தங்கிவிடலாமா என்னும் ஒரு சபலம்!" என்றான் பதிலுக்கு.

"அதெல்லாம் தப்பு தம்பி! ஆயிர காத தூரம் அந்நிய தேசத்துக்குப் போனாலும், பிறந்த மண்ணுக்கு எதுவும் ஈடாகாது தம்பி! அந்த உணர்ச்சியே வேறு. உனக்குச் சொன்னால் புரியாது. தாய்நாட்டுப் பற்று என்பது ஒருவர் மனதில் ஆழமாக வேர் ஊன்றுவது கடினம். அவ்வாறு வேர் ஊன்றிவிட்டால், அப்புறம், அதன் வேரை வெட்டி வீழ்த்துவதும் கடினம்! தாய்ப்பாலுக்கு ஈடு இல்லை என்பது எப்படியோ, அப்படித்தான் தாய் நாட்டு உணர்வும்! அப்பா, அம்மா, உற்றார் உறவு என்று இருந்து வாழ்கிற வாழ்வே தனி தம்பி! நீ உன் ஊருக்குப் போய் அங்கேயே இருப்பதுதான் நல்லது!" என்று எடுத்துக் காட்டினாள் கிழவி.

வேட்டரையனுக்கு ஒரு பக்கம் சிரிப்பு வந்தது. கிழவியின் நாட்டுப் பற்றைக் கண்டு இன்னொரு பக்கம் வியப்பும் எழுந்தது. கிழவி குறுக்கிட்டு, "பாரேன் தம்பி! இந்த ரோகணநாடு எவ்வளவு அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருக்கிறது. என் உறவுப் பிள்ளையான மன்னர் மடிந்தார்! அவரது மூத்த பிள்ளை, கொள்ளி வைக்கக்கூட வரவில்லையாம்! ஓடிப் போயிருந்த இளையவன்தான் வந்தானாம்! இப்போது விகாரதேவியும், அவன் கடைசிப் பிள்ளையும் கூட, அரண்மனையைவிட்டுப் போய்விட்டார்களாம், சண்டை, சண்டை என்று வேறு பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கிறதாம். இந்தச் சூழ்நிலையில் எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லைதான்! என்றாலும், பிறந்த மண் ஆயிற்றே இது! இந்தப் பகுதியின் புழுதி மணத்திலேயே வாழ்ந்துவிட்டேனே! போய் விட மனம் வரவில்லை. இந்த மண்ணிலேயே கட்டையைப் போட்டுவிடத்தான் விரும்புகிறேன்" என்றாள்.

அரண்மனை விவகாரங்களில் கிழவி எவ்வளவு அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறாள் என்பதறிந்து, அவளைப் பெருமையுடன் ஒருவினாடி கூர்ந்து கவனித்துவிட்டு, "நல்லது பாட்டி, உன்யோசனைப்படியே நடக்க யோசிக்கிறேன்!" என்று கூறிவிட்டு இரண்டடி எடுத்து முன் வைத்தான்.

வாயிலில் குதிரைகள் வந்து நிற்கும் காலடியோசை கேட்டு, பரபரப்புடன் வாயிற் பக்கம் வந்து நின்றான். இருள் சூழ்ந்துகொண்டிருந்ததால், வந்தவர்களது முகம் தெளிவாகத் தெரியவில்லை வேட்டரையனுக்கு. அதே காலடி ஓசையைக் கேட்ட கிழவியும், ஒரு தீப்பந்தத்தைக் கொளுத்திக்கொண்டு வாயிலுக்கு வந்தாள்.

தீப்பந்தத்தின் உதவியால், குதிரையில் வந்தவர்




களைச் சட்டென்று அடையாளம் கண்டுகொண்ட வேட்டரையன், சமிக்ஞை மூலம் எதுவும் பேசவேண்டாம் என்று எடுத்துக் காட்டினான்.

புதிய பயணிகளை வரவேற்று உபசரித்து உள்ளே அழைத்தாள் கிழவி. வந்தவர்களில் ஒருவன், குதிரைகளைக் கொண்டுபோய், விடுதியின் பின்புறம் இருந்த லாயத்தில் கட்டிவிட்டு வந்தான்.

வந்தவர்களில் ஒருவன் கிழவியிடம் "சூடாகத் தேநீர் கிடைக்குமோ?" என்றான். "இதோ ஒரு நொடியில் போட்டுக்கொண்டு வருகிறேன்" என்று கூறி கிழவி நகர்ந்தாள்.

வேட்டரையன், வந்தவர்களில் தனக்கு முன்பே அறிமுகமான ஆனால் முதலமைச்சரின் மெய்க் காவலர்களில் ஒருவனை மேனிவிடங்கனும் இருப்பதைக் கண்டு, அவனைப் பார்த்து, "இதற்கு நீயா வரவேண்டும்?" என்றான், குசுகுசுத்த குரலில்! "தேவியார் உத்திரவு அப்படி!" என்றான் மேனிவிடங்கன்.

"வாருங்கள், அந்த அறைக்குள் சென்று பேசலாம் என்று அனைவரையும் அழைத்துச் சென்று, தனியான ஒரு அறையுள் நுழைந்து அமர்ந்துகொண்டான். அனைவரையும் இருக்கச் சொல்லி விட்டு, இலுப்பெண்ணெய் விளக்கொன்றை கிழவியிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டு வந்தான்.

மேனிவிடங்கன், இரத்தினாவை வேட்டரையனுக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டு, "இரத்தினா தேவி அவர்கள், பேரரசியாரின் குமாரியைப் போல! பாதுகாப்புடன் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும்!" என்றான். "நல்லது" என்று அவன் பதில் சொல்லிவிட்டு, அந்த அறையின் ஒரு மூலைக்குச் சென்று, திரையிடப்பட்டிருந்த ஒரு பகுதியின் உள்ளே போய், உடனே திரும்பிவந்து, ஒரு ஓலையை மேனிவிடங்கனிடம் கொடுத்துவிட்டு, "இந்த ஓலை, உடனே மன்னருக்குச் சேரவேண்டும். இப்போதைய ரோகணரடாவின் படத்தை, எழுத்துக்களால் பொறித்திருக்கிறேன்!" என்று கூறினான்.

"அதெப்படி முடியும் வேட்டரையா! எனக்கு சிறகுகள் இருந்து பறந்துபோய் விடுவதாக இருந்தால்கூட, நாளை மாலை வரையிலாவது அவகாசம் வேண்டுமே!" என்றான் சிரித்துக்கொண்டே! இரத்தினாவும் அது கேட்டுச் சிரித்துவிட்டாள்! "நல்லநேரம் பார்த்து நகைச்சுவை உதிர்க்கிறீர்கள்!" என்றாள் அவள்.

"எப்போதுமே அவன் அப்படித்தான் சகோதரி!" என்று கூறியவன், "நீங்கள் உடனே புறப்படுங்கள்!" என்று துரிதப்படுத்தினான்.

இரத்தினா உட்பட நால்வரும் மீண்டும் வாயிலுக்கு வந்தனர்! குளிர்காற்று பலமாக வீசத் தொடங்கி இருந்தது. ஒன்றிரண்டு தூரல்கள் வேறு விழுந்து கொண்டிருந்தது. வானத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டு இரத்தினா, பலமான மழை வரும் அறிகுறி காணப்படுகிறதே என்று வருத்தத்துடன் கூறினாள்.

ஒரே நேரத்தில் வேட்டரையனும், மேனிவிடங்கனும், கூடவந்திருந்த இன்னொரு காவல் வீரனும் வானத்தைப் பார்த்து, அப்படித்தான் தோன்றுகிறது என்றார்கள்.

"இரவு வரையில் தங்கி இருந்துவிட்டு, பொழுது புலரும் முன்பு. கருக்கல் கட்டத் தொடங்கியவுடனே புறப்பட்டுப் போவதுதான் நல்லது என்று நினைக்கிறேன்!" என்றாள் இரத்தினா! "அதுதான் நல்லது" என்றான் வேட்டரையனும். மீண்டும் அனைவரும் விடுதிக்குள் புகுந்து அறையுள் நுழைந்து, பொது விஷயங்கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

அரை நாழிகை நேரம் கூடக் கழிந்திராது. பேய் மழையும், சூறைக் காற்றும் தொடங்கிவிட்டது. "நாங்கள் புறப்படாதது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று!" என்று சொல்லிக்கொண்டான் மேனிவிடங்கன்.

பயணக் களைப்பில், ஒரு மூலையில் அப்படியே முடங்கிவிட்டாள் இரத்தினா! இன்னொரு இடத்தில் மற்றொரு வீரனும் விழுந்து தூங்கிப் போனான்.

வெகுநேரம் வரையில் மேனிவிடங்கனும், வேட்டரையனும் பேசிக்கொண்டே அமர்ந்திருந்தனர், 'தளபதியார் எப்படி இருக்கிறார்' என்றான் வேட்டரையன்! "சுறுசுறுப்பாக இருக்கிறார்! படைக்கலங்களின் உற்பத்தித் துரிதமாகிக் கொண்டிருக்கிறது. நந்திமித்திரனின் தலையைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார், எந்த நேரத்திலும். மலையநாட்டில், கல்யாணியைத் தவிர மற்றைய சிற்றரசுகளின் உதவிகூட நமக்குக் கிடைக்கும் என்றே தெரிகிறது!" என்றான் மேனிவிடங்கன்.

"உனக்குத் துணைத் தளபதி பதவி கிடைக்கக் கூடும் என்று பேச்சு அடிபட்டதே! என்ன ஆயிற்று?"

"இப்போதும் அந்தப் பேச்சு அடங்கிவிடவில்லை. ஆனால் தளபதியாருக்கு அது விஷயத்தில் திருப்தி இருக்கிறதா என்று நினைக்கிறாராம் மன்னர்."

"தளபதியார் மட்டும், உணர்ச்சி மிகுதியால்

ஒரு காரியம் பற்றிச் சிந்திக்காமல், நிதான நிலையிலிருந்து சிந்திப்பாரானால், அந்தக் கிரேக்கன் அலெக்சாண்டர் என்பவனைவிட, பெரிய வீரராக விளங்கக் கூடும்! நமது துரதிருஷ்டமோ என்னவோ தெரியவில்லை, அவர் உணர்ச்சி வயப்படும் இயல்பினராக இருக்கிறார்!''

''இருக்கட்டுமே வேட்டரையா! என்றாலும், அந்த உணர்ச்சிப் பெருக்கு நம் எதிரிகள் பக்கம் தானே பாய்கிறது! அதுவரையில் நமக்கு இலாபம் தானே.''

''இலாபமோ, நட்டமோ, இவ்வளவு பெரிய பொறுப்பான பதவியில் இருப்பவர்களுக்கு இது போன்ற மிகு உணர்ச்சி, நல்ல விளைவுகளைத் தராது என்பதுதான் என் கருத்து!''

''மன்னருக்கும் அது புரியத்தான் செய்கிறது. என்றாலும் உணர்ச்சி வயப்படும் அந்தப் போக்கு பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை என்றே நினைக்கிறாராம்!''

''எப்படியோ! காலம், வெகு நன்றாகக் கனிந்திருக்கிறது. இப்போதே படையெடுப்பு நடக்குமானால், இந்த ரோகணரடாவில், ஒரு புல் பூண்டு கூட இல்லாமற் செய்துவிட முடியும்!''

''அது நடக்காது வேட்டரையா! எதிரிகளை நாம் தான் முதலில் தாக்கினோம் என்ற இழுக்குக்கு மன்னர் இடந்தரமாட்டார்! ரோகணரடா எப்போது தாக்கத் தொடங்குகிறதோ, அதற்குப் பிறகுதான் நமது தாக்குதலும் தொடரும்; போகட்டும்! ரோகணுவின் இப்போதைய நிலையில் நீ நினைப்பதுபோல ஒரு போர் நடத்தக்கூடிய நிலை இருக்கிறது என்று நினைக்கிறாய்?''

''மேனிவிடங்கா! தீசன், தனது தாயுடன் தீகவாபிக்குச் சென்று தங்கி இருக்கிறான். என்றாலும், அவன், அவனது அன்னைக்குத் தெரியாமலேயே கமணனைத் தாக்கத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறான். எப்படியும் கமணன் மகாகாமாவுக்கு வராமல் இருக்கப் போவதில்லை. கமணன் மகாகாமாவுக்கு வந்துவிட்ட தகவல் எப்போது தீசனுக்குக் கிடைக்கிறதோ, அப்போதே அவன் கமணன்மீது படையெடுப்பான். அதையும் விகாரதேவியிடமிருந்து மறைக்க முடியாது. படையெடுப்பு விவகாரம் தெரிந்தவுடன், விகாரதேவி, தீசனிடம் இருக்கமாட்டாள். கமணனுக்கே ஆதரவு காட்டுவாள்! விகாரதேவியும், கமணனும், மகாகாமாவுக்கு மீண்டும் திரும்பிவிட்ட பிறகு. இப்போதைய நிலைமைகள் அனைத்தும் மாறுபட்டுப் போகும். கமணனுக்கு இருந்த தடை மன்னர்தான்! அவரும் மடிந்துவிட்டார். மன்னர்கூட, கமணனுக்கு ஆதரவு காட்டுபவர்போல காணப்பட்டு, உள்ளுக்குள் ரோகணரடாவுக்கு எதிராகவே செயல்பட்டு வந்திருக்கிறார் என்று அறிந்து நானே வியந்து போனேன்! அப்புறம், கமணனால், தீசனை எதிர்ப்பது ஒரு பெரிய காரியமல்ல! அவனும் அடக்கப்பட்டு அல்லது சிறை பிடிக்கப் பட்டுவிட்டால், பழைய நிலைமைகள் மீண்டு விடுகின்றன. போர் நடைபெற எந்தத் தடையுமே இல்லையே!''

''புரிகிறது வேட்டரையா! இந்தச் சகோதரச் சண்டையைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''நினைக்க என்ன இருக்கிறது!'' என்று கேட்டுக் கொண்டே, அறையின் ஒருபக்கமிருந்த பலகணியின் பக்கம் சென்று வெளியே எட்டிப் பார்த்தான்! கும்மிருட்டு சூழ்ந்து கொண்டிருந்தது. பேய்மழையோ, பேய்க் காற்றோ நின்றபாடில்லை. ''இன்னமும் மழை நிற்கவில்லை'' என்று தனக்குள் பேசிக்கொண்டே திரும்பி வந்து, மேனிவிடங்கன் அருகே அமர்ந்து கொண்டு, ''இதெல்லாம் அந்த மன்னரின் திருவிளையாடல்தான்! சகோதரர்களைப் பிரித்துவிட்டால், போர் முனையின் ஒரு பகுதியை முறியடித்து விடலாம் என்பது மன்னர் நினைப்பு! எதையோ சொல்லி இளையவனின் மனதை மாற்றி இருக்கிறார் அவர். தீசனும் அதையே ஒரு காரணமாய்ப் பற்றிக்கொண்டு விரோதத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறான்! அல்லாமல், அவனே ரோகணுவுக்கு மன்னராகி விடவேண்டும் என்று நினைக்கவும் கூடும் இல்லையா?''—என்றான்.

''ஆக, ஒரு பெரும் போருக்கான சூழ்நிலை மாறி விடவில்லை என்று நீ நினைக்கிறாய்!'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தான், மேனிவிடங்கன். வேட்டரையனும் எழுந்து கொண்டே, நீ படுத்துக்கொள்! ஓலை பத்திரமாக இருக்கிறதல்லவா!'' என்றான். மேனிவிடங்கன் இடுப்பைத் தொட்டுப் பார்த்து ''இருக்கிறது. நீ கவலைப்படாதே! இரத்தின பத்திரம்!'' என்று கூறிவிட்டு, அறையைவிட்டு வெளியே வந்து நின்று, அங்கிருந்து வெளிக் கதவு மூடப் பட்டுவிட்டதா என்று எட்டிப் பார்த்தான்.

மங்கிய எண்ணெய் விளக்கின் ஒளியில் சரியாகத் தெரியவில்லை. ஆனால், கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. அதற்குள் வேட்டரையனும் வெளியே வந்தான். அவனுக்கும் தெளிவாகக் கேட்டது, கதவு தட்டப்படுவது. கிழவிக்கு இன்னேரம் மூன்றாவது ஜாமமாக இருக்கக்கூடும். அவள் எங்கே எழுந்து வந்து திறக்கப் போகிறாள்? என்று சொல்லிக்கொண்டே வேட்டரையன் கதவைத் திறக்கப் போனான்.

''வேண்டாம் வேட்டரையா; நானே சென்று திறக்கிறேன்!''—என்று கூறி, அவனே முன் சென்று கதவைத் திறந்தான்! வேட்டரையன் அறையின் முகப்பிலேயே நின்று கொண்டிருந்தான்!

கதவைத் திறந்ததும், தடுமாற்றத்தோடும், நனைந்த உடைகளுடனும் உள்ளே வந்து நின்றவனைக் கண்டதும், மேனிவிடங்கன், தன்னை அறியாமலேயே, ''நீயா!'' என்று கேட்டு விட்டான்.

அந்தக் குரலைக் கேட்டதும், வழியில் குதிரையை விட்டு விட்டு, பேய் மழையில் நனைந்துகொண்டு தள்ளாடிக்கொண்டே அந்த விடுதிக்கு வந்து சேர்ந்த நந்திமித்திரன் ஒரு கணம் அதிர்ச்சி அடைந்தான். இந்தக் குரலை எப்போதோ, எங்கோ கேட்டிருப்பதாக ஒரு உணர்வு அவனுக்குள் எழுந்தது. ஒரு கணம் சிந்தித்தான். தளபது தியாகராயரிடமிருந்து தப்பி ஓடி, மகிந்தன் மலைக்குன்றின் குழிப் பகுதிகளில் ஒளிந்துகொள்ளச் சென்ற சமயம், குன்றின் அடிவாரத்தில் தன்னை வளைத்துப் பிடித்த மேனிவிடங்கனின் குரல்தான் அது! என்பதைப் புரிந்துகொண்டு விட்டான்!

தொய்ந்து துவண்ட அவனது உணர்வுகள் முறுக்கேறின. சோர்வுற்றிருந்த நரம்புகள் புடைத்தெழுந்தன. ஏறிட்டுப் பார்த்துக்கொண்டே, நந்திமித்திரனும், மேனிவிடங்கனைப் பார்த்து ''நீயா?'' இங்கேயா? இந்த நேரத்திலா?'' என்றான்.

இருவரது உள்ளத்திலும் அந்த ஒரு வினாடியில் என்னென்னவோ எண்ணங்கள் உதயமாகிக்கொண்

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்
பட்டுகள் பிரமாதம்
நெசவோ நெஞ்சையள்ளும்
சூர்தாக்கள்
பெல் பாட்டம்கள்
லுங்கிகள்
சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.
பாலசுந்தரம் பில்டிங்ஸ்
எழும்பூர் : சென்னை-8

டிருந்தன. தூரத்தில் நின்று கொண்டிருந்த வேட்டரையனுக்கு, வாயிலில் பேசிக்கொண்டது தெளிவாகக் கேட்கவில்லை. இடியும், மழையும் உரையாடலின் ஒலிப் பரவலைத் தடுத்துக்கொண்டிருந்தன. எனவே, வாயிலுக்கே வந்து யார் எனப் பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டு, இரண்டடி எடுத்து முன்னே வைத்தான். சட்டென்று நின்று, தான் அவ்வாறு செல்லக்கூடாது என்று உணர்ந்தான். மேனிவிடங்கன் வந்து விவரத்தைச் சொல்லட்டும்! என்று எண்ணித் திரும்பி, அறைக்குள் வந்து நின்று கொண்டான்.

தூரத்திலிருந்து மேனிவிடங்கனுடன் எண்ணங்களால் மோதிக்கொண்டிருந்த நந்திமித்திரன் அவனைக் கவனிக்கவில்லை.

ஒரே நேரத்தில் இருவரது கரங்களும் தத்தமது உடை வாளின்மீது கரம் பதித்துக்கொண்டன.

"ஓ! ஒற்றுப் பணிக்கு உன்னையும் அனுப்பிவிட்டானா அந்தத் தியாகராயன்!" என்றான் நந்திமித்திரன்.

"நந்திமித்திரா! நீ ஒரு தமிழன் என்பதையும், உன்னைப் பெற்றெடுத்த தமிழினத்துக்குத் துரோகம் இழைத்துக்கொண்டிருக்கிறாய் என்பதையும் மறந்துவிட்ட திமிர், உனது பேச்சிலே இருக்கிறது. உன்னையும் ஒரு மகனாகப் பெற்றாளே அந்தத் தமிழ்த் தாய் என்று வருந்துகிறேன்!" என்றான் மேனிவிடங்கன்.

அந்த விடுதியே கலகலத்துப் போகுமோ என்று எண்ணும்படியாக ஒரு பேய்ச் சிரிப்பை உகுத்தான் நந்திமித்திரன். விடுதி முழுவதும் எதிரொலித்தது அந்தச் சிரிப்பு! இடியோசையையும்கூட மீறிக் கேட்டது அந்த வெடிச் சிரிப்பு! அறைக்குள் உறங்கிக் கொண்டிருந்த இரத்தினாவும், மற்றொரு வீரனும் கூட அது கேட்டு விழித்துக்கொண்டு எழுந்துவிட்டனர். இரத்தினா பரபரப்புடன் எழுந்து வாசலுக்கு ஓடிவந்தாள். அவளைத் தடுத்து நிறுத்திவிட்டு 'போகக்கூடாது' என்று சமிக்ஞை காட்டினான், வாயில் முகப்பில் நின்றுகொண்டிருந்த வேட்டரையன்.

வேட்டரையன் மனத்தில், உள்ளே வந்தவன் யாராக இருக்கும்? அவனால் ஏதேனும் விபரீதம் விளையப் போகிறதா? என்கிற ரீதியில் எண்ணங்கள் பிறந்துகொண்டிருந்த வேளையிலேதான் அந்தப் பேய்ச் சிரிப்பின் ஒலிவந்து, செவிப் பறையைத் தட்டிவிட்டது. பேராபத்து ஒன்று வரப்போகிறது; எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்று திடப்படுத்திக் கொண்டு, சோம்பல் முறித்துக்கொண்டு, அருகில் நின்ற வீரனிடம், உடைவாளுடன் தயாரிலிருக்கும்படி காதோடு காதாகக் கூறினான், இரத்தினா எதுவும் புரியாமல் விழித்துக்கொண்டு நின்றாள்.

வெளியே—

"உன்னைப் பெற்ற தமிழ்த் தாய்தானடா என்னையும் பெற்றாள். முட்டாளே! என்னை வஞ்சித்ததுபோல, அவள் உன்னையும் வஞ்சித்திருந்தால், நீயும் என்போலத்தானடா மாறி இருப்பாய்!" என்றான் நந்நிமித்திரன்.

"நந்திமித்திரா! தாய் தன் மகனை எந்தக் காலத்திலும் வஞ்சிக்கவே மாட்டாளடா. அவளது சில நடவடிக்கைகளைக் கண்டு, நாம்தான் வஞ்சிக்கிறாள் என்று நினைத்துக் கொள்கிறோம்! நாமும் வஞ்சகர்களாக மாறிவிடுகிறோம்! ஒரு தாயின் உள்ளத்தில்

மகனுக்கு எதிராக வஞ்சக எண்ணமும் இடம் பெற இடமிருக்குமானால், அவளுக்கு 'தாய்' என்ற பெயரே இதுவரையில் நிலைத்திருக்க முடியாது. தாய்நாடு என்றுதான் இதுவரையில் தமிழர்களுக்கு தமிழகம் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது. உன் அற்ப எண்ணங்களின் செயல் வேகத்துக்கு நீ ஊக்கம் கொடுத்துவிட்டாய்! அந்த ஊக்கத்தை மிகுதிப் படுத்திக்கொண்டு விட்டாய்! அதனாலேயே தாய்த் தமிழகத்துக்கு எதிராக உன்னால் துரோகமிழைக்க முடிகிறது..." என்றான் மேனிவிடங்கன்.

"என் நடவடிக்கைகளுக்கு துரோகம் என்பது தான் பொருள் என்பது உனது விளக்கமாக இருக்குமானால், அந்தத் துரோகத்தைத்தான் நான் என் வாழ்நாள் வரையிலும் செய்துகொண்டே இருப்பேன்! எனவே, ஒற்றறிய வந்திருக்கும் உன்னையும் விடப் போவதில்லை"—என்று கூறி உடைவாளை உருவிக் கையிலெடுத்துக்கொண்டு, தாக்கத் தொடங்கிவிட்டான் நந்திமித்திரன்.

அவன் எந்த நேரத்திலும் தன்னைத் தாக்கத் தயாராகிவிடக்கூடும் என்பதிலே எச்சரிக்கையாக இருந்த மேனிவிடங்கனும் உடைவாளை உருவிக்கொண்டு, வாளினால், நந்திமித்திரனது வாளைத் தடுத்து நிறுத்திக்கொண்டே, "நந்திமித்திரா, நீ மீண்டும் அனுராதபுரம் அரண்மனையில் கைதியாக வந்து நிற்க விரும்பமாட்டாய் என்றே நினைக்கிறேன்" என்றான்.

தன் வாளை தடையிலிருந்து உருவிக்கொண்டே நந்தியும், "முட்டாளே! அது இனி நடக்கப் போவதில்லை; ஆனால், வேட்டரையனது தலையைத்தான் அந்த எள்ளாளனுக்குப் பரிசாக அனுப்பிவைக்க இருந்தேன். அவனுக்கு முன்பாக உனது தலையே பரிசாக அனுப்பப்பட்டுவிடப் போகிறது என்பதை அறிந்துகொள்!" என்று கூறி மீண்டும் தாக்கினான்.

ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டே, அந்த இடத்தைவிட்டு நகர்ந்து, உள் பக்கமாக முன்னேறிக் கொண்டிருந்தனர். இருவருமே ஒருவர்க்கொருவர் சளைக்காமல் கடும் ஆங்காரத்தோடு வாளைச் சுழற்றிக்கொண்டிருந்தனர். தான் மீண்டும் எள்ளாளர் முன்பு, கைதியாகச் சென்று நிற்பதால், தனக்கு நேரும் அவமானம் பற்றிய கவலையால், நந்திமித்திரனது வாள்வீச்சு கடுமையாக இருந்தது. ஒரு இனத் துரோகியால், நாட்டுக்கும் மக்களுக்கும் உண்டாகிக் கொண்டிருக்கும் கேடு களையப்பட்டாக வேண்டும் என்ற வெறியில் மேனிவிடங்கனது வாள் சுழன்று கொண்டிருந்தது.

இருவருக்கும் ஒரேவிதமான பொருத்தம் இருந்ததென்றால், அது இருவருமே அலுத்துக் களைத்திருந்த நிலைதான். ஏறக்குறைய ஒன்றேமுக்கால் நாள் மேனிவிடங்கன் குதிரைமீது பயணம் செய்துவந்த களைப்பு. அதுபோலவே, ரோகணரடாவின் பல பகுதிகளிலும் அலைந்து திரிந்துவிட்டு, மாலையில் பாறையொன்றின்மீது தலைமோதுண்டு தாக்கப்பட்டு சோர்ந்திருந்ததுடன், இடியையும், மின்னலையும் கொடுங்காற்றையும் பயங்கர மழையையும் எதிர்த்துப் போராடிக் களைத்து சோர்ந்த நிலையில் விடுதி சேர்ந்திருந்த நந்திமித்திரன்!

நேரம் ஆக ஆக, இருவருமே களைத்துப்போய் விட்டனர். ஆனாலும் யாரும் யாரையும் வெற்றி காணவில்லை என்ற நிலை இருந்தது. இதற்குள் ஏறக்குறைய அவர்கள், வேட்டரையன் மறைந்து கொண்டிருந்த அறையின் எதிரே வந்துவிட்டார்கள். அறையின் மூலையில் மறைந்து நின்றுகொண்டிருந்த வேட்டரையனுக்கு, வாட்போரில், மேனிவிடங்கன் மிகுதியும் களைத்துவிட்டான் என்பது எளிதில் புரிந்தது. இனியும் தாமதித்தால், விளைவு எப்படியாகும் என்பதைக் கூறமுடியாதென்று நினைத்து, அருகே இருந்த வீரனுக்கு, வெளியே சென்று மேனிவிடங்கனுக்கு உதவும்படிக் கூறிவிட்டு, இரத்னாவிடம், என்ன நேரிட்டாலும் வெளியே வரக்கூடாது என்று கட்டளையிட்டுவிட்டு, அவனும் வாளை உருவிக்கொண்டு வெளியே வந்து நந்திமித்திரனைத் தாக்கத் தொடங்கினான்.

உள்ளிருந்தபடியே அவைகளைக் கவனித்துக் கொண்டிருந்த இரத்தினாவுக்குக் கிலி பற்றிக்கொண்டது. குலைநடுங்கிக் கொண்டிருந்தது; உடல் ஆட்டங் கண்டு கொண்டிருந்தது.

எதிர்பாராமல், தன்னை எதிர்க்க இன்னும் இருவரா? என்று நினைத்துக்கொண்ட நந்திமித்திரன், அச்சங் கொள்ளவில்லை. அவர்கள் யாராக இருக்கும் என்பதிலேயும் கவனம் செலுத்தவில்லை. அந்தக் கூட்டத்தையே முறியடித்து மூன்று தலைகளையும் அனுராதபுரத்துக்கு அனுப்ப வேண்டும் என்ற வெறி பற்றிக்கொண்டது.

அந்த வெறியோடு ஓங்கிய வாள், சரியானபடி மேனிவிடங்கனது வலக்கையில் தோள்பட்டைக்குக் கீழே பதிந்து மீண்டது. 'ஐயோ' என்றல் அலறல் ஒலி மீண்டும் விடுதியில் மோதி எதிரொலித்தது. மேனிவிடங்கன் கீழே உருண்டான். உருண்ட வேகத்தில் இடையில் செறுகி இருந்த ஓலை நழுவிக் கீழே விழுந்ததை நந்திமித்திரனது கொள்ளிக் கண்கள், அந்த மங்கிய ஒளியிலும் காணத் தவறவில்லை.

---

மேனிவிடங்கன் கீழே உருண்டதையும், அவன் இடையிலிருந்து ஓலை நழுவியதையும், நந்திமித்திரன் கவனித்து விட்டதையும் அறைக்குள்ளிருந்தபடியே கவனித்து விட்ட இரத்தினா துடிதுடித்தாள். மன்னரிடம் சேரவேண்டிய ஓலை! நந்திமித்திரனது கைகளில் சிக்கிக்கொண்டால்...?

பதை பதைத்தது அவளது நெஞ்சு. வெளியே ஓடிவந்து அந்த ஓலையை எடுத்துக்கொண்டு ஓடிவிடலாமா என்றுகூட எண்ணமிடத் தொடங்கிவிட்டாள். எந்த நிலையிலும், என்ன ஆனாலும் வெளியே வரக் கூடாது என்று வேட்டரையன் கூறியது நினைவுக்கு வந்தது. வேட்டரையன் சொல்கிறபடிதான் தான் நடந்து கொள்ள வேண்டும் என்று அரசியார் கூறி அனுப்பியதையும் நினைத்துக் கொண்டாள் இரத்தினா! என்றாலும் அந்த ஓலை கீழே கிடக்கிறதே! வாட்போரில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரது காலிலும் மாறி மாறி மிதிபட்டுக் கொண்டிருக்கிறதே!

இரத்தினாவைப் போலவே, வேட்டரையனுக்கும் அந்த ஓலை காப்பாற்றப்பட வேண்டியதன் அவசியம் மிக முக்கியமானது என்று பட்டது. நந்திமித்திரனிடமிருந்து தப்பியாவது அதனை எடுத்துக் கொண்டு ஓடிவிடவேண்டும். அது முடியும் அவனால். ஆனால் இரத்தினா! மனப்போராட்டம் மிகுந்து கொண்டிருந்தது வேட்டரையனுக்கு! எனவே சரியானபடி ஈடு கொடுக்க முடியவில்லை அவனால். இன்னொரு வீரன் மட்டுமே தாக்குதலைப் பலமாக்கிக்கொண்டிருந்தான்!

## முக்கிய அறிவிப்பு

28—11—71 இதழ் முதல் 'காஞ்சி' இதழின் விலையும் சந்தாவும் கீழ்க்கண்டவாறு மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு சந்தா (மலர்கள் இல்லாமல்) | ரூ. | 13 | 00 |
| ஆண்டு சந்தா (மலர்கள் உட்பட) | ரூ. | 16 | 50 |
| 6 மாதம் (மலர் இல்லாமல்) | ரூ. | 6 | 50 |
| தனிப் பிரதி | | 0 | 25 |
| சீரணி, நூலகங்கள், சமூகக் கல்வி நிலையங்களுக்கு ஆண்டு சந்தா (மலர்கள் உட்பட) | ரூ. | 16 | 50 |

(ஜூலை மாதத்தில் ஆண்டு மலரும், ஜனவரியில் பொங்கல் மலரும் வெளியாகும்.)

நிர்வாகி: 'காஞ்சி'
காஞ்சிபுரம்-3

யாருமே எதிர்பார்க்கவில்லை, அது நடந்துவிட்டது. நந்திமித்திரனேகூட நினைக்கவில்லை, அத்தனைச் சீக்கிரம் அது நடந்துவிடக்கூடும் என்று! அறையின் உள்ளே இருந்த இரத்தின 'ஆ' என்று வீறிட்டு அலறிவிட்டாள்! ஆமாம், வேட்டரையனது தலை, நந்திமித்திரனது கைவாளுக்குப் பலியாகி, தொங்கிப் போய் விட்டது! அவன் கனவு நினைவாகி விட்டது அதே நேரம், அவனது பார்வை, இன்னெருவனது தாக்குதலைச் சமாளித்துக்கொண்டே அலறல் ஒலி கேட்ட அறைக்குள் சென்று கொண்டிருந்தது.




## நெஞ்சில் நிறைந்த அண்ணு!

(வங்கனூர் அ. மோகனன்)

★

மலர் எனிலோ தாமரையே மணத்தில் நிற்கும்!
மன்னரெனில் தென்னுட்டை ஆண்டோரேயாம்!
கலையெனிலோ ஓவியமே முந்திக் கொள்ளும்!
கனிகளெனில் முக்கனியே எதிரில் தோன்றும்!
குலமகளைக் கண்டெடுக்க முயன்றே மானல்
குறைவில்லாக் கண்ணகியே முதலில் நிற்பாள்!
தலைமையினை ஏற்குமொழி தமிழர் நாட்டில்
தலைவரெனில் முதல்நிற்போர் அறிஞர் அண்ணு!

கறையுண்டு பல்லினிலே நிலவைப் போல!
கருத்துண்டு சொல்லினிலே ஒளியைப் போல!
குறைவுண்டு உருவத்தில் குள்ளம்; ஆனல்
குறைவான எண்ணங்கள் அவருக் குண்டோ?
அறிவுண்டு பழுத்தநல்ல பழத்தைப் போல
அதனையவர் அவையினிலே எடுத்து வைத்து
நிறைவான வாழ்க்கையினைத் தேடிக் கொண்டார்
நிலையாக நம்நெஞ்சில் இடத்தைப் பெற்ருர்!

தேள்கொடுக்குப் பேச்சாளர் தோன்றி இங்கே
தேன்போலும் தமிழ்மொழியைப் பாழே செய்தார்
நாள்கெடுக்கும் அவர்பேச்சில் நாட்டோர் எல்லாம்
நலங்கெட்டுத் தரங்கெட்டு வந்த போது
தோள்கொடுக்க நான்உள்ளேன் என்று சொல்லித்
துயர்துடைத்தார் நலங்கொடுத்தார். அன்று தொட்டு
வாள்இடுக்கில் தோன்றுகின்ற பேச்செல்லாம்போய்
வாய்இனிக்கப் பேசுகின்ற வார்த்தை கேட்டோம்!

காய்இனிக்க வேண்டுமெனில் பழுக்க வேண்டும்!
காதினிக்க வேண்டுமெனில் கருத்து வேண்டும்!
பாய்இனிக்க வேண்டுமெனில் பாவை வேண்டும்!
பண்பினிக்கத் தமிழ்நாட்டில் பிறக்க வேண்டும்!
நோய்இனிக்க எவரும்இங்கு நினைக்க மாட்டார்
நோன்பினிக்க வேண்டுமெனச் சிலபேர் இங்கே
வாய்இனிக்க உண்பார்கள்! தமிழ நாட்டோர்
வாழ்வினிக்க வேண்டுமெனில் அறிஞர் காட்டும்

'கடமைகண்ணி யம்கட்டுப் பாடே'என்னும்
கண்ணனைய கொள்கைவழி நடத்தல் வேண்டும்!
மடமையினை மாய்ப்பதுவே அண்ணனுக்கு
வையத்தார் காட்டுகின்ற நன்றி யாகும்!
தடையொன்று தமிழுக்கு வந்த தென்ருல்
தலைமகனும் நம்அண்ணு எதிர்க்கச் செல்வார்
புடம்போட்ட எனதருமைத் தோழா நீயும்
புறப்படுவாய் அப்பணியைத் தொடர்ந்து செய்ய!



# ஏழையின் மகிழ்விலே - - இறைவனைக் காண்கிறோம்!

இறைவழிபாடுளது என்பதுபற்றி, ஆத்திகப் பெருமக்களால் நாத்திகக் கூட்டமென்று இழித்து ஒதுக்கப்பட்ட நாம், விளக்கமளிக்க வேண்டி வந்தது விந்தைதான்! 'ஓம்' என்பதற்குப் பொருளைச் சிவபெருமான் தன் இளைய மைந்தன் முருகனிடமிருந்து அறிய வேண்டியிருந்தது என்கிறார்களே, புராணத்தில்! அதைப் போன்றதுதான் இது என்று வேண்டுமானாலும் வைதிகப் பெரியவர்கள் வைத்துக் கொள்ளட்டும், நமக்குக் கவலையில்லை! ஆனால் அதற்குக்கூட அவர்கள் நம்மை அனுமதிக்கமாட்டார்கள். 'தங்கப்பன்சாமி'யாக நம்மைக் கற்பனை செய்வதுகூட அவர்களுக்கு எரிச்சலூட்டும் செயல்தான்! என்னும் நம்முடைய கடவுட் கொள்கை இது என எடுத்துச் சொல்லவும் இந்தக் கொள்கையுடையோர் ஏன் ஆலய நிர்வாகத்தை நடத்திட இயலாது என்று கேட்கவும் நமக்கு உரிமையும் உண்டு; கடமையுமுண்டு. நாம் அளித்திடும் விளக்கங்களை ஏற்றுத் தெளிவு பெறுவது ஆத்திகப் பெரியோர்களின் பெருந்தன்மையைப் பொறுத்தது! நம் நாட்டில் உள்ள 'உண்மையான' சமயப் பெரியவர்கள் மிக்க பெருந்தன்மையாளர்கள் என்கின்ற நம்பிக்கைதான் இந்தக் கட்டுரையின் அடித்தளம்!

தமிழகத்தின் ஆலயங்களின் நிருவாகத்தைப் பொறுத்தவரை பல வித குற்றச்சாட்டுகள் சில 'சந்தர்ப்ப வாதம்' செய்யும் பக்த வேடதாரிகளால் சொல்லப்பட்டு வருகின்றன. நடந்துபோன '71 தேர்தலில் அவ்வித குற்றச்சாட்டுகளையே ஆதாரமாகக் கொண்டு நாடுமுழுதும் பிரச்சாரம் செய்யப்பட்டது. அதற்கான நல்ல பதிலை தேர்தலில் மக்கள் அளித்துவிட்டார்கள்! எனினும் பக்தர்களென வீண் வேடம் பூண்டோருக்கு அந்தப் பதில் செவியில் ஏறவில்லை. மீண்டும் கூச்சல் கிளப்புகின்றனர்!

தி.மு.க.வினர் நாத்திகர்! ஆகவே ஆலய நிர்வாகம் அவர் கையில் இருத்தல் ஆகாது!' என்பதுதான் 'திடீர்ச் சமயவாதிகளின்' குற்றச்சாட்டு!

இதனை நாம் ஆராய்ந்து பார்த்தால் எவ்வளவு பொருளற்ற குற்றச்சாட்டு என்பதை உணரலாம்!

தமிழக வரலாற்றின் துணை கொண்டு இந்தக் குற்றச்சாட்டுகளை மறுப்பது, முறையானது என கருதுகிறோம்! போலி பக்தர்களின் கூற்றுப்படியே, கடவுட் கொள்கையில் தமக்கென்று ஒரு கருத்துக் கொண்டோர் ஆட்சிபீடம் ஏறும் போது அந்தக் கொள்கைக்கு வேறுபட்ட கொள்கையுடைய சமயத்தார் அல்லது மதத்தார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் மீது காய்வது இல்லை; அல்லது அவர்கள் காய்கின்றார்களே என்பதற்காக அரசு கட்டில் ஏறினோர் தம் கொள்கையிலிருந்து மாறுபட்டதுமில்லை!

புலவர்
**கோ. அண்ணாமலை**

சைவ சமயத்தைச் சார்ந்தவன் அரசுகட்டிலில் இருந்தால்வைணவ சயமத்தவன் அவன்மீது அவ நம்பிக்கை கொண்டு தூற்றுவதில்லை; வைணவர்கள் தூற்றுகிறார்களே என்பதற்காகச் சைவனும் சமயத்தைத் தகுந்தாற்போல அச்சமயத்திற்கு மாற்றிக் கொள்வதுமில்லை! கடவுளைப்பற்றித் தான் எந்தக் கொள்கையுடையவனாக இருந்தாலும் மன்னன், மற்ற மதத்தவர்க்கு வேண்டும் மத நலன்களைப்போற்றி வளர்த்துக் கொடுத்தமைக்கு வரலாற்று ஆதாரங்கள் தமிழகத்தில் ஏராளமாக உண்டு! அப்படிப்பட்ட பெருந்தகைமை யுடையவர்களை எந்த மதத்தினை—சமயத்தினைச் சார்ந்தவர் என்கிற கணக்கிலல்ல; பொதுவாகத் தமிழர்கள் என்ற கணக்கிலே எடுத்துக் காட்டிட விழைகின்றோம். இந்த நாட்டிலே உள்ள மக்களின்வேண்டுகோளுக்கு மட்டுமல்ல-வெளி நாட்டு வணிகர்களுக்காக அந்நாட்டு வேந்தர்கள் விடுத்த வேண்டுகோளினை ஏற்றுக் கொண்டு, வேண்டும் வசதிகள் செய்து கொடுத்த வரலாற்று நிகழ்ச்சிகளும் தமிழகத்திலே உண்டு!

"ஸ்ரீவிஷயம், ஸ்ரீவிஜயம், பாலம்பங் என்ற வேறுபட்ட பெயர்களையுடைய பேரரசு ஒன்று மலையம் சுமத்ரா சாவகம் முதலான நாடுகளில் நிலவிய காலத்தில் அப்பேரரசில் தலைமை வகித்த சைலேந்திர குலத்தினருள் ஒருவனான மாற விசயோத்துங்க வர்மன், சோழ நாட்டுத்துறை முகமாகிய நாகப் பட்டினத்தில் தன்னாட்டு வர்த்தகர்களுக்காகப் புத்தப் பள்ளியொன்று கட்டுவதற்கு வயங்குபுகழ் வளவன் முதலாம் இராசராசனை வேண்டிக் கொள்ள, அவ்வேண்டுகோளுக்கு இணங்கினதும் அன்றி, இராசராசன் ஆனைமங்கலம் என்ற ஊரின் பெரிய வருவாயையும் அப் பள்ளிக்கு அளித்தனன்!"

இந்த வரலாற்றுக் குறிப்பை ஏன் இங்கே எடுத்துக் காட்டுகிறோம்? இது மட்டுமல்ல, எண்ணற்ற மசூதிகளும், மாதா கோயில்களும் புத்த பள்ளிகளும் தமிழகத்தில் எழுந்திருக்கின்றனவே, மிகப் பழங் காலந் தொட்டு அவைகளையும் நினைவூட்டுகிறோம்-ஏன்?

எந்த மதக் கருத்துடையவன்—அல்லது எந்தக் கடவுள் கொள்கையுடையவன் அரசு கட்டில் ஏறியிருந்தாலும் அவன் 'கடவுட் கருத்து' ஒன்றாக இருக்க, வேறு 'கடவுட் கருத்து'டையவர் தம் செயல் வழி முறைகளுக்கு அவனால் எவ்வித ஏதமும் ஏற்பட்டதில்லை என்பதனை எடுத்துக் காட்டிடத் தான்!

'நாத்திகம்' என்பதுகூட கடவுளைப் பற்றிய கொள்கைதான்! 'கடவுள் இல்லை' என்பதும் கடவுளைப் பற்றிய கருத்தறிவிப்புத் தான்! எனவே நாத்திகர்களும் சைவர், வைணவர், கிருத்தவர், மகமதியர். சமணர் என்பாரைப் போன்றவர்களே! சைவரும் வைணவரும் கிருத்தவரும் சமணரும் மற்றவரும் எப்படி வெவ்வேறு தோற்றங்களால் கடவுளை வழிபட்டிட விரும்புகின்றார்களோ அப்படியே கடவுளை நம்பாத நாத்திகரும் 'மனித சேவையே' 'மகேசன் சேவை' என்றால் அதனை ஏற்றிடுவதற்கு உள்ளபடியே உண்

மையான கடவுள் நேயத்தினருக்கு என்ன தடங்கல் இருக்க முடியும்?

முதலாம் இராசராசனைப் பற்றி நாம் எடுத்துக் காட்டிய வரலாற்றுத் துணுக்கில், அவன் ஒரு சமயத்தினனுயிருந்தும் வெளிநாட்டவர் வசதிக்காகவும்—தன் மதத்திலிருந்தும் வேறுபட்ட மதத்தினர்க்கு உதவிய பான்மையை அறிய முடிகிறது. அதுவே போல திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு கடவுளைப் பற்றிய கருத்து என்னவாக இருந்தால் என்ன—நிருவாகத்தில் பிழை ஏற்படுவதற்கு அதில் ஏதும் இல்லை! மேலும் கடவுள் கொள்கையைப் பற்றித் திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கல்ல — பல ஆண்டுகளுக்கு முன்பாகவே தன் கருத்துக்களைத் தெளிவுபடுத்தி வந்திருக்கிறது.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றும் 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்றும் 'ஏழையின் மகிழ்ச்சியில் இறைவனைக் காண்கிறோம்' என்றும் அறிஞர் அண்ணு பல்வேறு நேரங்களில் சொல்லி வந்திருக்கிறார்.

இவைகளில் எல்லாம் நிறைவு கொள்ளாதவர்க்கு ஒன்றை நினைவூட்டுகிறோம்; அண்ணுவும் உடன் பதினைந்து கழகத்து வீரர்களும் தமிழக சட்ட மன்றத்தில் இருந்த அந்நாளில் — சிகாகோவிலிருந்து வந்த ஒரு செய்தியாளர் நேரடியாகவே அண்ணுவைக் கேட்டார்:

"நீங்கள் ஒரு கடவுள் இருக்கிறார் என்பதை ஒப்புகிறீர்களா?" —என்று, அப்போது வி. பி. இராமன் (அப்போது அண்ணுவின் அருகினில் இருந்தவர்) அந்த நிருபரை 'நீங்கள் ஏன் 'ஒரு கடவுள்' என்கிறீர்கள்?' என்று கேட்டார். ஆனல் அண்ணு மனித ஆற்றலை மீறிய ஒரு ஆற்றல் (Supreme-Power) இருப்பதை நாங்கள் ஒப்புகிறோம்" என்று விடையளித்தார். இது 1958-ல் நடந்தது! மனித சக்திக்கு மேற்பட்ட சக்தி இருப்பதை ஏற்கிறோம்; ஆனல் அந்த சக்தியைக் காட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற மூடப் பழக்க வழக்கங்களை நாங்கள் வெறுக்கிறோம் — கண்டிக்கிறோம்! கடவுளின் பெயரால் இந்த நாட்டில் எண்ணற்ற கேடுபாடுகள் — கண்மூடிப் பழக்கங்கள் — மூட நெறி முறைகள் சில ஏமாற்றுக்காரர்களால் ஏற்படுத்தப்பட்டுவிட்டன! அவற்றை ஒழித்து முடிப்பதை நாங்கள் கொள்கைகளில் ஒன்ருகக் கொண்டுள்ளோம் என விளக்கியுள்ளார்கள்.

9—10—58-ல் நடைபெற்ற இந்தப் பேட்டியின்போது அறிஞர் அண்ணுவினல் வெளியிடப்பட்ட இந்தக் கருத்து எந்த அழுத்தத்திற்கும் பணிந்தோ — தேர்தல் மேடையிலோ வெளியிடப்பட்ட கருத்தல்ல! சிகாகோ டெய்லி டைம்ஸ் (Chicago Daily Times) இதழின் நிருபர் பிரீடன்பர்க் என்பார் கேட்ட கேள்வியும் உண்மையை அறியக் கேட்ட கேள்வி! சொன்ன பதிலும் உண்மையை அறிவிக்கச் சொன்ன பதில்!

இதன் பிறகு அண்ணுவின் மொழிகளான 'ஏழையின் மகிழ்வில் இறைவனைக் காண்கிறோம்' என்பதனையும் 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்பதனையும் எண்ணிப் பார்த்திடவும் அதனை மையமாகக் கொண்டு இறைவனுக்கு வரும் வருமானத்தை அவனுடைய 'எளிய ஏழைக் குழந்தைகளுக்கு'ச் செலவிடுவதை ஏற்புடையதென ஏற்றுக் கொள்ளவும், 'கோயில்'களை வைத்துப் பிழைப்பு நடத்திடுவோர் முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

'ஏழையின் மகிழ்விலே தான் இறைவன் இருக்கின்றுன்' — என்கிற தத்துவம் நம்முடைய இந்து மதத்துச் சாரம் மட்டுமல்ல; அனைத்து மதங்களின் முடிவான கொள்கையாகவும் விளங்குகின்றது.

சாக்கிய முனி—கௌதம புத்தனின் வாழ்க்கை எளியவரின் நோயை—துன்பத்தை — முதுமை இன்னலை — மரணத்தைக் கண்டதால் தொடங்கியது என்பது வரலாறு! புத்த மதம் தொடங்கியதே — ஏழையின் இன்னலைக் கண்ட கௌதமன் மனக் கலக்கத்திலேதான்! அந்த இன்னலை எப்படித் துடைப்பது என்ற வினவுக்கு விடை தேடியபோது தான்—புத்த மதமே கருக்கொண்டது!

ஏசு மதத்திற்கு, 'ஏழையின் மகிழ்விலே இறைவன்' என்ற தத்துவம் ஏற்புடையதா? இதோ ஏசுவே பேசுகிறார்:

Jesus said: 'I was hungry and you fed me. I was naked and you clothed me. I was thirsty and you quenched my thirst.'

"நான் உணவின்றிப் பசித்திருக்கிறேன்; உடையின்றி இருக்கிறேன். தாகத்துடன் இருக்கிறேன். பசிக்கு உணவும், உடலுக்கு உடையும் தாகத்தணிப்பும் தந்தீர்கள்" என்கிறார்.

'பசித்திருப்பவனுகவும், ஆடையின்றியிருப்பவனுகவும் தாகத்துடனிருப்பவனுகவும் நானே இருக்கிறேன். பசித்தவனுக்கு உணவிட்டால் எனக்கு உணவிட்டீர்கள்! தாகத்தால் தவிப்பவனுடைய தாகத்தை தணித்தால் என் தாகத்தைத் தணித்தவராவீர்கள்! என்பதாக ஏசுவே பேசுகிறார். எனவே ஏசு மதத்தாருக்கு நம்முடைய கொள்கை ஒப்புடைய கொள்கையே!

முகமதியர் ஏழையர்க்குதவ தனியே பொருள் — வரியாக — சேமிப்பதுண்டு!

ஆக, பெர்னுட்ஷா—["There is only one religion, though there are hundred versions of it."] நூற்றுக்கணக்கான வகையில் வாசகங்கள் இருந்தாலும் மதம் என்பது ஒன்றுதான் என்று குறிப்பிட்டாற்போலவே, எல்லா மதங்களின் மையக் கருத்தினையும் உணர்ந்துதான் பேரறிஞர் அண்ணு அவர்களும் கழகத்தவரும் 'ஏழையின் மகிழ்வில் இறைவனைக் காண்கிறோம்' என்றனர்.

வேறு மதக் கோட்பாடுகளை எடுத்துச் சொன்னல் இந்து தேவாலயங்களின் நிருவாகத்திலே குறை காணும் 'திடீர்ச் சமயவாதிகளுக்கு' ஒத்துக் கொள்ளாது. எனவே இந்து சமயத்தை மற்ற சமயங்களோடு ஒப்பிட்டுக்காட்டி உலகெங்கும் இந்துமதக் கோட்பாடுகளை விளக்கிய பெரும் பேராசான் — முன்னுள் இந்திய ஜனுதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் மொழியையும் தமிழகத்தில் தேவாலயம், நிதி—பாதுகாப்பு என்ற வறட்டுக் கூச்சல் போடும் கூட்டத்திற்கு நினைவுபடுத்துகிறோம்.

முதலில் அவர், "மதத்தின்மீது மனிதர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்றுல் அது, இந்த மத நிறுவனங்கள் வெளிப்புறத் தூய்மைக்காக — உள்ளார்ந்த உணர்வு — மெய்யுணர்வாழ்வுக்கென்றில்லாமல்—வாதாடும் வழக்கறிஞர்களாக ஆகிவிட்டதனுல் வந்தது! அது மட்டுமல்ல மத நிறுவனங்கள் (ஆலயம் போன்றவை) இருக்கிற நிலைமையில் எவ்வித மாற்றமும் கூடாது என்கிற வாதம் செய்வதில் வல்லமை பெற்று இருப்பதனுல்தான் மனிதர்கள் மதத்தின்மீது அதிருப்தி

(15-ஆம் பக்கம் பார்க்க)

படை திரட்டும் பக்தர்களே!

# கத்தியை எடுத்தவன்...

இதோ நான் அழுதிண்டிருக்கேன்...

வெளியே மழை பெய்யறது வருணபகவான் நாள் முழுவதும், யாரோ செஞ்ச பாவத்துக்குப் பரிகாரம் தேடருப் போல மௌனமா அழுதிண்டிருக்கார்.

மழையோட சேர்ந்து புழுதி நாத்தமும் 'கமகம'ன்னு மணந்திண்டு வரதே, இன்னும் மழை தூர்ரதுன்னு நேக்கு நன்னுகாட்டறது. ஆனு, மழை, இதோ, இப்பவோ, இன்னும் கொஞ்ச நேரத்திலோ விட்டுடும். ஆனு, என் கண்ணீர்?

என் மன்னி கூடச் சொல்ரு நான்எப்பப்பார்த்தாலும். மூதேவி மாதிரி அழறேனும். கொழந்தெ மாதிரி அடம்பிடிக்கிறேனும். ஏன் நான் அப்பிடி செய்யறேன்? பயித்தியமோன்னு நேக்கு? ஆ...ஆ... நேத்துத்தான் சொன்னு நேக்குப் பயித்தியமும் பிடித்துடுத்தாம்! அப்பிடி அவ கேட்டச்சே அண்ணு கூட பொம்மெ மாதிரி நின்னுண்டிருந்தானே அதெ நெனச்சா நேக்கு அழுகை பொத்துக் கொண்டு வரது... ஆமா, இன்னும் மழை லேசாத் தூறிண்டு தான் இருக்கு.

'டபார்'ன்னு ஒரு சத்தம் கேக்கறது. நான் கண்ணைத் தொடச்சிண்டு ஓடிப் போய் ஜன்னலண்டை நின்னு வெளியே எட்டிப் பார்க்கறேன். அய்யோ! எவனே வாண்டுப் பயல் குடையோட வழுக்கி விழுந்துட்டான். அவன் சட்டைலே சேறும் தண்ணியும் நெறஞ்சிடுத்து. 'ஓஹோன்னு எனக்கு சிரிப்பும் ஒரு பக்கம் வரது. ஆனு, நேக்குத் தெரியும், நான் ரொம்ப நேரம் சிரிச்சிண்டிருக்க மாட்டேன்னு...

இக் கட்டுரைப்பகுதி தொடர்ந்து வரும். ஆரிய மாயையையும், புரட்டுக்களையும் காலச் சூழ்நிலையோடு புரட்டிக்காட்டும்; தேவாலயப் பாதுகாப்பு என்பதன் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தும்.

ஜன்னலேவிட்டு இந்தண்டை வரனும்னு நெனேக்கறேன். ஆனு, ஒரு ஈன சத்தம் கேக்கறச்சே, திருப்பி நான் திரும்பிப்பார்க்கறேன். எங்க ஆத்துக்குக் கிழக்குப் புறமோ, மேற்குப் புறமோ, நேக்குத் தெரியல்லே, உள்ள—அரச மரத்துக்கு கீழ ரெண்டு நாய்கள் சரசம் புரிஞ்சிண்டிருக்கு. ஓ! அந்த பெண் நாய்கிட்டே இருந்துதான் அந்தக் கேவல் சத்தம் வந்ததோ? ஒரு வேளே அந்தப் பெண் நாயோட சம்மத இல்லாமே, சரசம் நடக்குதோ? அது எப்படி? இதோ, நான் சொல்றேன் பாருங்கோ...... இதெல்லாம் நேக்கு ஒத்துவராது. ஆனு. அதைப் பார்க்கப் பார்க்க, திருப்பியும் நேக்கு அழவேணும் போல் இருக்கு!

பக்கத்தாத்துத் கதவு மூடிக் கிடக்கறது, நேக்குத் தெரியறது.

— பொடியன் —

யாரோ வந்து கடை வாசலில் நின்னுண்டு, கதவைத் தட்டலாமான்னு யோசிக்கரு......'தட்டாதேங்'கோன்னு சத்தம்போடணும் போல் நேக்குத் தோணறது. ஏன்? ஏன்?

ஆ......... இதே போலத்தான். ரொம்ப நாளேக்கு முந்தி, ஒருநாள் சாயந்தரமா... இதேபோல மழை லேசாத் தூறிண்டிருக்கு...அண்ணுவும் மன்னியும் என்னெத் தனியா விட்டுட்டு ஜாலியா சினிமாவுக்குப் போயிட்டா. தனியா இருந்தா எனன்னமோ தோணும்னு சொல்வாங்களே. அதே மாதிரி தான் நேக்கும்......ஆனு என்னன்னமோ இல்லே, ஒண்ணே ஒண்ணு தான்!

அண்ணுதான் நாள் முழுக்க புலியா இருந்திட்டு, ராத்திரி ஆனதும், மன்னிகிட்ட எப்பிடி பசுவா மாறிடருன்னு நான் நெனேச்சேன். அப்பிடி நெனேச்சதும், அதைத் தொடர்ந்து ஒருசம்பவமும் நேக்கு நெனேவுக்கு வந்தது!

ஒருநாள் அவங்க ரெண்டுபேரும் பலமாப் பேசிச் சண்டைபோட்டுக் கிட்டாங்க. நாள் முழுக்க முகங் கொடுத்து கூடப் பேசிக்கல்லே. ராத்திரியாவது பேசிக்கருங்களான்னு பார்க்க நான் திருட்டுத் தனமா தூங்கறதாப் பாசாங்கு பண்ணிண்டிருந்தேன்.

ஆனு, அவா ரெண்டு பேரும் பேசிக்காமெ, 'உம்'முன்னு படுத்திண்டிருந்தா. அண்ணு, திடீர்னு என்னேத் திரும்பிப் பார்த்தாள். நான் கண்ணெ இறுக்கிக்கிட்டு...

கண்ணைக் கூர்மையாக்கிக் கொண்டுப் படிக்க வேண்டும் என்ற முன்னுரையோடுதான் அதைக் குறிப்பிடவேண்டும்;

"ஆலயம் விடுதலை பெற நாம் நரசிம்மாவதாரமாக, எரிபத்த நாயனுராக மாறினுல்ஒழிய வேறு வழியில்லை"

அர்த்தநாரீஸ்வர அடியார்கள் தாம் அவதாரம்எடுக்கப்போகின்றவர்கள்; என்ன அவதாரம்...? நரசிம்ம அவதாரம்!! பச்சையாகவே பார்ப்போமே; பக்தர்கள்தான் நரசிம்ம அவதாரம்; சரி, ரங்கசாமித் தேவர்களும், சங்கராச்சார்ய சுவாமிகளால் பாராட்டுப் பெற்றவரும், இந்து தேவாலயப் பாதுகாப்புக் குழுவின் தலைவர் தீ. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்களும், மற்றும் கிருஷ்ணசாமி முதலியார்களும் [செங்கை மாவட்ட இந்து தேவாலயப் பாதுகாப்பு மாநாட்டு உப தலைவர்] பிரகலாதர்கள் என்பதிலும் மறுப்பில்லை. அந்தப் பெருமையை இவர்களும் வேண்டாம் என்று வெறுக்கப் போவதும் இல்லை, நாடும், அரசும், காவல் துறையும் கவனிக்க வேண்டியது இரணியன் யார்! அல்லது இரணியன்கள் யாவர்? என்ற வினுக்களுக்குரிய விடைகளைத்தான்!!

[2]

## சிறப்புக் கட்டுரை!

பக்திப் படை எதிர்க்கப்போவது இந்த அரசைமட்டுமல்ல; தி. மு.

கழகத்தினர்; திராவிட கழகத்தினர், தமிழரசு கழகத்தினர்; தமிழ்ப் பற்றுளர்கள் ஆகிய இவர்களையும் எதிர்ப்பது தவறு...தவறு நரசிம்மாவதார வேலையைச் செய்வது தான் பக்திப் படையின் பணி. ஆம்! மலரின் ஒவ்வொரு பக்கத்திலும் வீசும் இரத்தவாடை இதைத்தான் சுட்டுகிறது.

நாத்திக இரணியனை மட்டுமா இந்த நவீன நரசிம்மாவதார 'அன்பே கடவுள்கள்(!) அழிக்கப் போகிறார்கள்? இல்லை......இல்லை. தவத்திரு. குன்றக்குடிகளாரைப் போன்ற ஆத்திகர்களையும் அல்லவா இவர்கள் இரண்யனுக்கப் போகின்றார்களாம்.

தமிழில் அர்ச்சனை வேண்டும்; தூய்மையானவர்களும், இறைவன் என்றாலே கண்கள் பனிக்கும் இயல்பு கொண்டாடும் அர்ச்சகராக லாம்; ஆகவேண்டும்; இறைவன் தொண்டு ஏழைக்குச் செய்யும் பணியே என்னும் நிலை வரவேண்டும் என்போரெல்லாம் பாதுகாப்புப் படையினர்க்குப் பழுத்த நாத்திகர்கள்!! அதுமட்டுமல்ல கோடரிக் காம்புகள்!!

நேரடியாகப் பார்ப்போம் பிரகலாதனால் காட்டிக்கொடுக்கப்பட்ட இரணியன், நரசிம்மவதாரத்தால் மார்பு பிளக்கப்பட்டு மாண்டான். இரணியனின் இரத்தத்தைக் குடித்து நரசிம்மாவதார நெடுமால் மனங் குளிர்ந்தார்.

இது கதை!! இந்தக் கதை இங்கு நடத்திக் காட்டப்படவேண்டும்; இது பாதுகாப்புப் படையினரின் ஆசை; அப்படியென்றால், இவர்கள் தங்களின் கோரிக்கைகளுக்கு மாறுபாடானவர்களைக் கொன்று குவிக்கப் போகின்றார்கள்; இந்த அரசில் உள்ளவர்களைக் கொன்று தீர்க்கப் போகின்றார்கள்; தமிழ்ப் பற்றாளர்கள் என்பதாலேயே கோடரிக் காம்புகளாக ஆக்கப்பட்டவர்களை அழித்துப் பழிதீர்க்கப் போகின்றார்கள்.

"குரங்கை அடிக்கக் கோலேந்து" என்று அழிப்புப் பண் பாடும் 'தொண்டர் தாசன்' என்பவரின் ஆசை இதுதானே!! யானையை வெட்டிய எரிபத்த நாயனார்களாகமாறவேண்டும் என்பவரின் நோக்கம், ஆட்களை வெட்டியெறிய வேண்டும் என்பது தானே!! "பாலையாம் நாத்திகப் பேய்களையும், பக்திச் சுழலிலே ஆழ்த்திக் கொல்வோம்" என்று அறுபதாம் பக்கத்தில் காணப்படும் பாட்டின் பொருளும் இதுதானே!!

"கம்சனை ஒழித்து தருமத்தை நிலை நாட்ட கண்ணன் உழைத்தான். ஹிரண்யனை வதைத்துத் தெய்வீகத்தைக் காக்க நரசிம்மம் கடுமையைக் கையாள வேண்டியிருந்தது. ராவணனைத் தீர்த்துக் கட்ட ராமன் களத்திலே இறங்கிக் கடும் போர் புரிந்தான். இந்து மதத்தை ஒழித்துவிட வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் சமூக விரோத, நாத்திகக்கும்பலை ஒடுக்குவதற்கு, ராமனாக, கிருஷ்ணனாக, பிரகலாதனாகஆஸ்திகர்கள்உழைத்தாக வேண்டும்" என்று சம்ஹார நர்த்தனமாடும் பாரதிய ஜனசங்கத் துணைத் தலைவர் அ. ப. தாஸ் அவர்களின்ஆசையும் இதுதானே!! 'அன்பே தெய்வம்' என்றவர்களின் உண்மையான உள்ளம் கொலை வெறிதான் என்றால், இந்த நாட்டைச் சுடுகாடாக ஆக்கத் திட்டம் போடப்படுகின்றது என்பதுதானே பொருள்!!

"எம்.எல்.சி. பதவிக்காகஅரசியல் வாதிகளின் அடி வருடும் துறவி" என்று குன்றக்குடி அடிகளாரைக் குத்திக் காட்டும் குருட்டு 'மணியார்', "காவியுடையில் திரியும் கோடரிக்காம்பு' என்று கொஞ்சமாவது ஆத்திகத்தின் உயிர் ஊசலாடிக் கொண்டிருப்பதற்குக் காரணமான புரட்சித் துறவி அடிகளார் அவர்களைக் குதறும் மணியார், துணிவு இருந்தால், தன் போர்ப் படையோடு புறப்படட்டும்!! அறிவோடு அறிவை மோதுவதற்கானாலும் சரி, அல்லது மற்றைய ஆயுதங்களோடானாலும் சரி வரட்டும்!! வேண்டுமானால், சீனத்திலோ, பாகிஸ்தானத்திலோ கொரில்லாப் போர்முறையைப் பயின்றும் வரட்டும்!! அமெரிக்க ஆயுதங்களைப் பெற்று வேண்டுமானாலும் வரட்டும்!!

ஆனால்,

ஆலயத்தையும், ஆண்டவனையும் காக்க அடியார்கள் வருவது என்றால், அந்த அடியார்களின் வல்லமை ஆண்டவனுக்கு இல்லையா?

தன்னைக் காத்துக்கொள்ளாத கடவுள் நம்மை எங்கே காப்பான்? என்று மக்கள் கேட்கும் கேள்விக்கு விடைகாண மட்டும்மறந்து விடாதீர்கள்!

ஆண்டவன் பெயரால் அடியார்கள் செய்யும் கொலைகள், மகத்துவம் என்ற பெயரால் மறைக்கப்பட்ட காலம் இது அல்ல என்பதையும் நினைவிற்கொண்டு போரிட வாருங்கள்."

சாமியார் சொன்னால் சாத்திரம்; குருக்கள் சொன்னால் வேதம் என்றெல்லாம் குருட்டுத்தனமாக நம்புவோர் கூட்டம் குறைந்து விட்டது என்பதை உணர்ந்து கொள்ள

---

<u>அடுத்த இதழில்:</u>

## வாதமென்ன வைத்தீர்கள் வம்பர்களே!

### பொடியன் விமர்சிக்கிறார்!

---

கொலை வாளோடு வாருங்கள்!!

சந்திரனுக்கு எத்தனைத் தாரங்கள் என்னும் காலம் மாண்ட இடத்தில் மரங்கள் வளர்ந்து விட்டன என்பதை மனதில் கொண்டு எத்தனை ஆயுதங்கள் உண்டோ, அத்தனை ஆயுதங்களோடும் வாருங்கள்!!

உங்களைச் சந்திக்கச் சட்டம் உண்டு; உங்கள் கொட்டத்தை அடக்கக் காவல் துறை உண்டு; வன்முறைக் கொடுக்களுக்கும் வாய்ப்பிருக்கும் அரசுண்டு. அத்தனையும் மீறி நீ வருகிறாயா? வா! வேகமாக வா! நாங்களிருக்கிறோம்!

கண்ணனாகவா வருவாய்? இங்கு ஏமாந்த கம்சர்கள் இல்லை!! நரசிம்மமாகவாக வரப்போகிறாய்? நம்பிக் கெடும் இரணியர்கள் இங்கு இல்லை!! ராமனாகவா வருவாய்? இங்கிருக்கும் ராவணர்களுக்கு விபீஷணத் தம்பிகள் யாரும் இல்லை!! எரிபத்த நாயனாராகவா வரப் போகிறாய்? ஏமாந்த கிழயானைகளாக இங்கு யாரும் இல்லை!! வா! படையோடா வரப்போகிறாய்? வந்துபார்!!

திண்ணைத்தூங்கிப் பண்டாரங்களுக்கே தீரம் வருகிறது என்றால், விண்ணையிடிக்கும் வீரர்களுக்கு வீரம் எப்படி இருக்கும்?

**சட்டையே கொதிக்கும் என்றால், கடல் பொங்காதா? எரிமலைக் குமுறலின் முன் அடுப்புப் புகை எம்மாத்திரம்?**

'தீவட்டி' நா.பா.க்களே புரட்சிப் பாக்கள் எழுதும் போது, பாவேந்தர் பரம்பரை பம்பரமா சுற்றிக் கொண்டிருக்கும்!!

வேண்டாம் இந்த வீண்வேலை. வாதங்களை வாதங்களின் வளத்தால் வெற்றிபெற முயலுங்கள். வாளால் வெற்றி பெற நினைக்க வேண்டாம் ... இது அணுகுண்டுக் காலம்!!

ஓடும் நீரில் கப்பலை விட்டு, உலகை வெல்ல நினைக்க வேண்டாம் ... இது நிலவில் மனிதன் கால் வைத்த காலம்!!

இன்னும் புரியவில்லையா?

"கத்தியை எடுத்தவன்...?

இந்தப் பழமொழியை முடித்து வைக்காதீர்கள். இது காலத்தின் எச்சரிக்கை!! *

## தொடர்ச்சிகள்

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடாமே சுருண்டு படுத்திட்டேன். 'ஏன்'னு யாருமே கேட்கலே!

அன்னிக்கு மத்தியானம் தான் மனசுக்கு ஆறுதலா இருக்கட்டும்னு நேக்கு மனசு இருக்கறது நேக்குத்தானே தெரியும் — ஒரு கதைப் புத்தகத்தை எடுத்தேன். அப்போ! அதுலே ஒரு கதையெப் படிச்சேன். அந்தக் கதை என்ன தெரியுமோ? நோக்கு மட்டும் சொல்றேன்!

என்னை மாதிரியே ஒரு பெண்ணும், ஆனா அவ என்னை மாதிரி இல்லே, காலேஜ்லே படிக்கிறது. அவளையும் 'அவன்' மாதிரி ஒருத்தன் கெடுத்துடறானும். பிறகு அந்தப் பொண்ணு தன் தாய் கிட்டே வந்து 'இப்படி நேர்ந்திடுச்சின்னு சொல்றாளாம். அதுக்கு அவள் தாய் என்ன செஞ்சான்னு கேக்கறேளா? அடிக்கத் தான் செஞ்சா வையத்தான் செஞ்சா. ஆனா மத்தவா வந்து என்னை கேட்டப்ப 'ஒண்ணுமில்லே, மழையில் இப்பிடி நெனைஞ்சிண்டு வந்திருக்கறாளேன்னா வையறேன்னாளாம். எப்பிடி? அப்புறம் என்ன செஞ்சாள்னு நெனைக்கறேள். அவளைக் கூட்டிப் போய் தலைலேதண்ணியெ ஊத்தி 'இன்னிலேருந்து நீ புது மனுஷின்னாளாம்.

கதையைப் படிச்சி முடிச்சதும் 'அடடா, நேக்கு இப்பிடி ஒரு அம்மா இல்லாமெ போனாளே'ன்னு நான் நெனைச்சேன். 'ஆனாலும், என்ன, அந்த அம்மாவுக்குப் பதிலா நானே என் தலைலே தண்ணியெ ஊத்திக்கிட்டேனேல்லியோ'—அப்பிடின்னு நெனச்சிகிட்டேன். 'நான் புது மனுஷி' தான்னு நேக்கு நானே சொல்லிகிட்டேன், எப்பிடி?...

ஆனா, இதோ இப்பிடி எப்பவாச்சும் ஞாபகம் வந்தா அழறேன். பிறகு சிரிக்கறேன். இதைப் பார்த்து, மன்னி 'பைத்தியம், பைத்தியங்கறா. நான் பைத்தியமா இல்லியா? நீங்களே சொல்லுங்க ......! நேக்கு ஒண்ணும் புரியலே! *

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்திருக்கின்றனர்" என்கின்றார்.

"If men are dissatisfied with religion, it is because religious organisations happen to be advocates of external piety and not spiritual life and are often Champions of the status quo."

டாக்டர் இராதாகிருஷ்ணன் அறியாத வேதம்- அவர் கற்காத மதபோதனைகள்- ஓதாத நீதிநூல்கள் உண்டா? "இருக்கும் நிலையில் மாற்றம் வேண்டாதவர்களாக மத நிறுவனத்தார் இருப்பதால்தான் மதத்தின் மீது மனிதர்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள்" என்று சொல்லும் டாக்டர் இராதாகிருஷ்ணனை மறுக்க—எந்த பிராமணர் முன்வருகிறார்? மேலே எடுத்துக்காட்டியது மட்டுமல்ல, கழகத்தின் கொள்கையை அண்ணாவின் மொழியை, உலகெங்குமுள்ள புகழோங்கிய பல்கலைக் கழகங்கள் அனைத்தாலும் 'பேரறிஞர்' என்ற பொருளில் 'டாக்டர்' பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்ட டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆங்கிலத்தில் சொல்லியதைக் கீழே எடுத்துக் காட்டுகிறார். ஏழைக்குச் செய்யும் சேவையே ஈசன் சேவை, எளியவனுக்கு செய்யப்படும்பணியே இறைவனுக்குச் செய்யப்படும் பணி, ஏழையின் மகிழ்வே இறைவனின் மகிழ்வு என்பதை நாம் சொன்னால் கிண்டல் செய்யும் மேல்சாதிக் கூட்டம், அதே மேல் வகுப்பில் பிறந்த உலகோங்கிய புகழ் நிறுவிய தத்துவ வித்தகரால் சொல்லப் படுகிறதே — ஏன் விளங்கிக் கொள்ள விரும்பவில்லை?

டாக்டர் இராதாகிருஷ்ணன் கணீரென்ற குரலில் ரிஷிகேசத்தில் *12—8—1954-இல் பேசுகிறார்:*

**"We affirm in loud tones that the service of man is the worship of God."**

"உரத்த குரலில் உறுதி செய்கிறோம் மனித சேவைதான், கடவுள் வழிபாடு என்று."

டாக்டர் இராதாகிருஷ்ணனின் குரல் எவ்வளவு கணீரென்று ஒலிக்கும் என்று அவர் குரலைக் கேட்டவர் அறிவர். அவரே, "உரத்த குரலில் உறுதி செய்கிறோம், 'மனித சேவையே கடவுள் வழிபாடு' என்கிறார்.

அரைகுறை சமயவாதிகள் நம்மைப் பழிக்கின்றனர். என்றைக்கு அவர்கள் உண்மையாய்த் திருந்திக் கொள்வரோ, கடவுள் தான் சொல்லவேண்டும்! ஃ




**எஸ். பி. சின்னச்சாமி, நூலேக்கெரேகாவல்**

டெல்லியில், அண்மையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், தமிழக முதல்வர், மாநில சுயாட்சிபற்றி எதுவும் பேசவில்லையே ஏன்?

அந்த மாநாடு, நாட்டின் பதட்ட நிலை பற்றியும், அதிலே மாநிலங்களது கடமை என்ன என்பது பற்றியும் ஆய்வு நடத்துவதற்காக மட்டுமே கூட்டப்பட்டது ஐயா!

* * *

மறைந்த அறிஞர் அண்ணாவின் தொகுதியில் நீங்களே தேர்தலில் போட்டியிடுவீர்களா?

இப்போது கூட காஞ்சிபுரம் தொகுதியில் காஞ்சிபுரத்துக்குச் சொந்தமான ஒருவர் என்பது மட்டுமல்லாமல் அறிஞர் அண்ணாவின் குடும்ப நண்பர் என்பவர்தான் நின்று வெற்றிபெற்றிருக்கிறார்.

* * *

பொள்ளாச்சி மகாலிங்கம் இப்போது எந்தக் கட்சியிலிருக்கிறார்?

"தொழில்" கட்சியிலிருக்கிறார்!

* * *

**புலவர். ம. இராசேந்திரன், எட. அன்னவாசல்**

தி.மு.க. தேர்தல் சின்னமாகிய 'உதயசூரியன்', கிழக்கில் உதிக்கும்போது கடலிலிருந்து தோன்றுவதைப்போலல்லவா இருக்கிறது! ஆனால் இரு குன்றுகளிடையே இருப்பதுபோல அமைந்திருப்பது எதனால்?

கிழக்கே கடல் இருக்கிறது என்பதையும் நாம் எல்லோருமே

அறிந்திருப்பதால், சூரியன் கடலிலிருந்துதான் எழுவதாக ஒரு பிரமை நமக்கு ஏற்படுவது இயல்புதான். மலைகள் மிகுந்திருக்கும் பகுதியிலிருந்து கவனித்துப் பாருங்கள், சின்னத்தில் களங்கம் காண முடியாது. அத்துடன் சின்னத்தை ஓவியத்தில் வடித்தவர்கள் வட நாட்டார். அந்தச் சூழலை மனதில் கொண்டு, 'உதய சூரியன்' என்று அவர்களே பெயரும் சூட்டி வைத்திருக்கிறார்கள். என்றாலும் இது பிழையானது என்று எவராலும் விமர்சிக்க முடியாது.

*  *  *

**பு. இராமனுதன், நெய்வேலி-3.**

தாழ்த்தப்பட்டோருக்கென்று தனி தட்டெழுத்துப் பயிற்சி பள்ளி அமைத்து, அதில் தேர்வு பெறுபவர்களுக்கு அரசுப் பணி கிடைக்கும் என்று சத்தியவாணிமுத்து அம்மையார் அறிவித்திருந்தார்களே, அது எப்போது நடக்கப் போகிறது?

சமுகத்தில் தாழ்ந்தும், பிற்பட்டும் இருப்பவர்களுக்காகத்தானே கழக அரசு எல்லா நடவடிக்கைகளையும் படிப்படியாக எடுத்துக்கொண்டு வருகிறது. அம்மையாரின் அறிவிப்பும் உரிய காலத்தில் செயல்படும்!

*  *  *

**இரா. கண்ணதாசன், சாத்தியம்.**

ஒருவன் மிகுந்த அறிவுள்ளவனுகவும், இன்னொருவன் சிறந்த முட்டாளாகவும் இருப்பதற்கு, பிறப்புதான் காரணமா? அல்லது சூழ்நிலையா?

தெய்வப் புலவர் திருவள்ளுவர் சொல்கிருர்: "நுண்ணிய நூல் பல கற்பினும், மற்றுந் தன் உண்மை அறிவே மிகும்!" என்று. இதனை நீங்கள் எப்படிப் பொருள் கொள்கிறீர்கள்?

*  *  *

அடிக்கடி கருத்தை மாற்றிக் கூறும் பெரிய மனிதர்கள் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

அடிக்கடி, நேரத்துக்கு நேரம், சமயத்துக்கு சமயம், சந்தர்ப்பத்துக்கு சந்தர்ப்பமாக "நிறம்" மாற்றிக்கொள்ளும் ஒன்று இருக்கிறதே—அதுதான் அவர்கள், வாழ்வென்பது?...

வினு!

*  *  *

சாவென்பது?...

விடை!

*  *  *

**கே. செந்தட்டி, விருத்தாசலம்.**

'வெண்பாப் போட்டி'க்கு 'தமிழரசு' போல நீங்களும் முயலக் கூடாதா? முன்புகூட அறிவிப்புக் கொடுத்திருந்தீர்களே?

தட்டும் 'தளை'யையும் முட்டும் 'சீரையும்' ஆய்வு நடத்திக் கொண்டிருக்கப் போதுமான அவகாசம் இப்போது இல்லை. முடிந்தால் பிப்ரவரிக்குப் பிறகு யோசிக்கலாம்.

*  *  *

எம். ஜி. ஆர். பதிலுக்காக வினு விடுத்திருந்தேன் — வரவில்லையே ஏன்?

புரட்சி நடிகரது பொறுப்புக்கள் இப்போது மிகுதியாக இருப்பதனுல்தான்!

**து. சிவப்பிரகாசம், திருநெல்வேலி.**

சில கிழமைகளாக 'காஞ்சி' மிகவும் விறுவிறுப்பாக இருக்கிறதே—உங்களை எப்படிப் பாராட்டுவது?

ஓராண்டுசந்தா ரூபாய் பதின்மூன்று அனுப்பிப் பாராட்டுங்களேன்!

*  *  *

சோழமாதேவி—தொடர்கதை முடிவை நெருங்கி விட்டதா?

ஏன்? கதையின் முடிவை இப்போதேத் தெரிந்துகொண்டு விட்டீர்களா என்ன?

**இரா. குமாரசாமி, திருத்தணி.**

'சோ'வின் 'கேள்வி-பதில்'களைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

சில விடைகளைப் படிக்கும்போது சிறந்த சிந்தனையாளர் என்று எண்ணத் தோன்றுகிறது. சிலவற்றைப் படிக்கும்போது இப் படிப்பட்டவரால் எப்படி ஒரு ஏடு நடத்த முடிகிறது என்று எண்ணத் தோன்றுகிறது! மொத்தத்தில் அது ஒரு நகைச்சுவைப் பகுதியாகத்தான் தெரிகிறது. அந்தக் கண்ணேட்டத்துடனேயே நீங்களும் பாருங்களேன்!

*  *  *

## கனவுகளைப் பற்றி......

இரவிலேயே நீண்ட, நினைவில் கொள்ளக்கூடிய கனவுகள் பெரும்பாலும் நடைபெறுகின்றன.

பழைய நினைவுகள் நம் மூளையில் பதிவாகி, நம் மூளை ஓய்வாக இருக்கும்போது அவை தற்செயலாக வெளியாகி பல்வேறு உருவங்களைப் பெற்று ஏற்படுகின்றன.

பெரும்பாலும் கனவுகள் கண்டவுடன் தூக்கம் கலைந்துவிடும். காரணம் நம் மூளை தன்னிலையை அடைந்து தன்னை சரிபடுத்துக் கொண்டு பிற உறுப்புகளையும் உசார்படுத்துவதே ஆகும்.

உணர்ச்சி வசப்படக்கூடிய கனவுகள் ஏற்படின், தூக்கம் கலைந்தவுடன்கூட நாம் அதனை யறியலாம். காரணம் அவை உண்மையாகவே ஏற்படுத்த முயலுகின்றன. சிலர் தூக்கத்தில் நடக்கவும் செய்யலாம்.

அச்சம் தரும் கனவுகள் பெரும்பாலும் பயப்படும் சுபாவம் உள்ளவர்களுக்கும், நோயாளிகளுக்கும், நிம்மதியில்லாதவர்களுக்கும், பல்வகை சச்சரவுகளில் உழலுகின்றவர்களுக்குமே ஏற்படுகின்றன.

சிறு குழந்தைகள்கூட கனவுகள் காண்கின்றன! அவை பெரும்பாலும் அதிசயங்களைப் பற்றியனவே!

சில குழந்தைகள் பயங்கரக் கனவுகள் கண்டு உள்ளத்தால் நொந்து துன்புறுகின்றன என்பது உண்மையே!

சில வாலிபர்களும் பயங்கரக் கனவுகள் கண்டு இரவில் தூக்கமில்லாமல் தவிக்கின்றனர். காரணம் அவர்களது நடத்தைகளே!

ஒருவன் பருவம் அடைந்ததும் கனவுகள் பெரும்பாலும் குறையத் தொடங்குகின்றன. சிறு வயதில்தான் கனவுகள் அடிக்கடி ஏற்படுகின்றன.-தொகுப்பு : மு. ஞானராஜ்

## அறிவிப்பு

வினு-விடைப் பகுதிக்கு வாசகர்களது வினுக்கள் வரவேற்கப்படுகின்றன. சுருக்கமாகவும் தெளிவாகவும், பண்பாடுள்ளனவாகவுமிருக்கவேண்டும். அஞ்சலட்டையில் எழுதினுலே போதும்.

— ஆசிரியர்.